Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, DECEMBER 21, 2021

செவ்வாய்க்கிழமை டிசெம்பர் 21, 2021 | ஒளி: 07 கதிர் 184 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## ஏப்ரலில் தரம் I ஆரம்பம்



2022ஆம் ஆண்டுக்கான தரம் ஒன்று மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் தாமதமாகவே ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்த கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன, 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# வைத்தியர்கள் இன்று வேலைநிறுத்தம்




ஏழு கோரிக்கைகளை முன்வைத்து இன்று (21) காலை 8 மணிமுதல் நாடளாவிய ரீதியில் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்தியகுழு தீர்மானித்துள்ளதாக சங்கத்தின் உதவிச் செயலாளர் டொக்டர் சமந்த ஆனந்த தெரிவித்தார்.

வேலைநிறுத்தத்தின் போது அனைத்து வைத்தியசாலைகளிலும் அவசர சேவைகள் பாதிக்கப்படாது என்று தெரிவித்த அவர், மகப்பேற்றியல் வைத்தியசாலைகள், சிறுவர் வைத்தியசாலைகள் மற்றும் மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைகளின் செயற்பாடுகள் பாதிக்கப்படாது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் ஐந்து மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கையானது நாசகார வேலை என சுகாதார அமைச்சு, நேற்று (20) தெரிவித்தது.

மன்னார், திருகோணமலை, நுவரெலியா, இரத்தினபுரி மற்றும் பொலன்னறுவை ஆகிய ஐந்து மாவட்டங்களில், சுகாதார அமைச்சின் செயலாளரின் தன்னிச்சையான நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்று காலை 8 மணி முதல் 24 மணித்தியால அடையாள பணிப் புறக்கணிப்பை வைத்தியர்கள் ஆரம்பித்திருந்தனர்.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்த சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (மருத்துவ சேவைகள்) டொக்டர் ஜி. விஜேசூரிய, வைத்தியசாலைகளுக்கான வைத்தியர்களை நியமிப்பதில் எவ்வித பிரச்சினையும் இடம்பெறவில்லை என்றார்.

உள்ளக நியமனங்களில் சுகாதார அமைச்சரோ அல்லது அமைச்சின் செயலாளரோ எந்தவிதமான செல்வாக்கையும் செலுத்த முடியாது என்றும் இது முற்றிலும் வெற்றிடப் பட்டியல் மற்றும் சேவைத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

# இரத்த வெள்ளத்தில் எஜமானியின் சடலம்



### உறுப்புகளை துண்டாடி வேலைக்காரி வேட்டை

■ கனகராசா சரவணன்

தான் பணியாற்றிய வீட்டின் எஜமானியைக் கண்டம் துண்டமாக வெட்டிக் கொலை செய்து, அவரின் கழுத்தில் இருந்த தங்க நகைகளையும் காதிலுள்ள தோட்டை காதுடன் அறுத்தெடுத்து சொப்பின் பையில் கொண்டு செல்ல முயன்ற சம்பவம் மட்டக்களப்பு, பார் வீதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

நேற்று (20) மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் பார் வீதியைச் சேர்ந்த 47 வயதான செல்வராஜா தயாவதி என்பவரே உயிரிழந்துள்ளதுடன், சம்பவத்தையடுத்து தப்பிச் செல்லமுயன்ற

தொடர்ச்சி P2

மூங்கிலாறு சிறுமி மரணம்:

# கருக்கலைப்புக்குப் பின் கடும் இரத்த போக்கு



### மருத்துவ அறிக்கை வெளியானது

■ சண்முகம் தவசிலன், செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு, உடையார்கட்டு வடக்கு மூங்கிலாறு பகுதியிலுள்ள பாழடைந்த வளவின் பற்றைக் காணிக்குள் இருந்து சனிக்கிழமையன்று (18) சடலமாக மீட்கப்பட்ட 13 வயது சிறுமி, அவரது அந்தரங்க உறுப்பில் ஏற்பட்ட காயம் காரணமாக அல்லது கருக்கலைப்புக்கு உட்படுத்தப்பட்டு பின் கடும் இரத்த போக்கு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார் என்று, சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

# நாட்டைக் கைப்பற்றி கட்டியெழுப்ப தயார்



### தேசிய மக்கள் சக்தி மாநாட்டில் அனுர குமார தெரிவிப்பு

தற்போதைய பாதகமான சூழ்நிலையில் இருந்து வெளிவரும் வகையில் இலங்கையை கைப்பற்றி கட்டியெழுப்ப தேசிய மக்கள் சக்தி தயாராக உள்ளதாக அதன தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

வடக்கு, கிழக்கில்

# சீனாவின் ஆதிக்கத்தை பரிசீலனை செய்க



### அரசாங்கத்திடம் வலியுறுத்தல்

■ வா.கிருஸ்ணா

வடக்கு, கிழக்கில் தனது ஆதிக்கத்தை சீனா நிலைநாட்ட முன்னெடுக்கும் செயற்பாடுகளை, இலங்கை அரசாங்கம் மீள் பரிசீலனை செய்ய வேண்டுமென பாத்மநாபா மன்றத்தின் தலைவரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான இரா. துரைரெட்ணம் வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2



எரிவாயு வெடிப்பு அச்சத்தால்

# இப்படியும் நடக்கிறது

■ கனகராசா சரவணன்

நாட்டில் எரிவாயு சிலிண்டர் அடுப்புகள் வெடித்துவரும் நிலையில் புதிதாக வாங்கிய காஸ் சிலிண்டர் வெடிக்க கூடாதென கடவுளுக்கு நேந்து துணியில் காசுகட்டி அதனை சிலிண்டரில் கட்டி சமையலில் ஈடுபட்டு வருகின்ற சம்பவமொன்று மட்டக்களப்பு ஆரையம்பதியில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பலிலிருந்த

# நஞ்சை வத்தளையில் புதைக்க முயற்சி



இலங்கை கடற்பரப்பில் தீப்பற்றி எரிந்த 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பலில் இருந்த அதிக நச்சு இரசாயனங்கள் அடங்கிய கொள்கலன்களை வத்தளை பிரதேசத்திலுள்ள உள்ளூர் தனியார் நிறுவனமொன்றுக்கு சொந்தமான காணியில் புதைப்பதற்கு முயற்சிகள் இடம்பெற்று வருவதாக முன்னிலை சோசலிச கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

கட்டணம் குறையுமென தெரிந்தும்

# அனுரகுமார குரல் கொடுப்பது ஆச்சரியம்

### அமைச்சர் ஜோன்ஸ்டன்



ஆசியாவில் இருக்கும் மின் நுகர்வோருக்கிடையில் மின்சார பிரிவுக்காக அதிக விலையை செலுத்துவது இலங்கையில் மாத்திரமே எனத் தெரிவித்த நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, யுகதனவி ஒப்பந்தம் மூலம் அந்த செலவு 50 சதவீதம் குறைவடைவதாகத் தெளிவாக தெரிவிக்கப்பட்டிருந்தாலும் ஒடுக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுக்கும் அனுரகுமார திசாநாயக்க இதற்கு எதிராக குரல் கொடுக்கின்றமை ஆச்சிரியமளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2




மேலதிக நன்கொடையாக இலங்கைக்கு

# 820,000 ஃபைசர்களை வழங்கியது அமெரிக்கா

இலங்கையின் சுகாதார அமைச்சுக்கு 820,000 ஃபைசர் பயோஎன்டெக் தடுப்பூசி டோஸ்களை அமெரிக்கா மேலதிக நன்கொடையாக வழங்கியுள்ளது என்றும் அமெரிக்க மக்களிடமிருந்து வழங்கப்பட்ட மொத்த நன்கொடை 3.4 மில்லியன் டோஸ்களாக அதிகரித்துள்ளது என்றும் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# ரஞ்சனுக்கு பாராளுமன்ற ஒன்றியம் ஆதரவு

அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் கூட ஒன்பது விடயங்கள் தொடர்பில் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஆதரவாக இருப்பதாகத் தெரிவித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். எதிர்க்கட்சி தலைவர் என்ற ரீதியில் தானும் பலமுறை ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்யுமாறு, ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தும் அவர் தொடர்ந்தும் சிறைவைக்கப்பட்டுள்ளார் என்றார்.

தொடர்ச்சி P2

எரிவாயுவுடன் தொடர்பான

# 847 வெடிப்புகள் பதிவு: 7 பேர் பலி; 16 பேர் காயம்

நாடு முழுவதும் எரிவாயுவுடன் தொடர்புடைய 847 வெடிப்புச் சம்பவங்கள் இந்த வருடம் மட்டும் பொலிஸ் நிலையங்களில் பதிவாகியுள்ளதாகவும் வெடிப்புகளில் 7 பேர் உயிரிழந்துள்ளதுடன், 16 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

# வீதியில் பயணித்த வயோதிபர் பலி

■ எம்.றொசாந்த், செந்தூரன் பிரதீபன்

யாழ்ப்பாணம் - திருநெல்வேலி சிவன் - அம்மன் வீதியில் உள்ள கிளி கடைக்கு அருகாமையில் வீதியால் பயணித்த வயோதிபர் ஒருவர், நேற்று (20) காலை திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

கந்தர்மடம் - பழம் வீதியைச் சேர்ந்த வைத்தியலிங்கம் செல்வரத்தினம் (வயது 67) என்பவரே, இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார். மேற்படி முதியவர் வைத்தியசாலைக்கு சென்று விட்டு வரும் போது மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார் என்று தெரிவித்த சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார், விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




# பதுளை மாணவி மாயம்

■ செல்வராஜா

பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவியொருவர், மேலதிக வகுப்புக்குச் சென்று வீடுதிரும்பவில்லை என்று பதுளை பொலிஸ் நிலையத்தில் மாணவியின் தாயாரால், நேற்று (20) முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தில் தரம் 12இல் கல்வி கற்கும் 17 வயதான லோகேஸ்வரன் லோஜினி என்ற மாணவியே, காணாமல் போயுள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# வைத்தியர்கள் இன்று வேலைநிறுத்தம்

சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வைத்திய அதிகாரியும் சமீபத்தில் நியமனங்கள் செய்யப்பட்ட வெற்றிடப் பட்டியலில் கையெழுத்திட்டுள்ளார் என்றும் வைத்தியர்களின் வேலைநிறுத்தம் ஒரு நாசகார நடவடிக்கை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது என்றார்.

# இரத்த வெள்ளத்தில்...

அந்த வீட்டின் முன்னாள் பணிப் பெண்ணையும் அவரது தந்தையையும் பொதுமக்கள் மடிக்கிப் பிடித்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,குறித்த வீட்டில் உயிரிழந்தவர், அவருடைய கணவர், மகள் ஆகிய மூவர் வாழ்ந்துவருகின்ற நிலையில், நேற்று மதியம் அவ்வீட்டில் முன்னர் பணியாற்றிய பெண், முன்னாள் எஜமானியிடம் தனது கஷ்டத்தை தெரிவித்துள்ளார்.வீட்டின் உரிமையாளர் மதியபோசனத்தை உண்ட பின்னர் நித்திரைக்காக மேல் மாடிக்குச் சென்றுள்ளதுடன், அவரின் மகளும் உணவை உண்டுவிட்டு தனது அறைக்கு சென்றுள்ளார். அதேநேரம் உயிரிழந்த பெண், குறித்த பணிப்பெண் மற்றும் அவரின் தந்தையாரை உணவு உண்டுவிட்டு போகமாறு அமர்த்தியுள்ளார். இதன் பின்னரே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.குறித்த பெண்ணின் கழுத்து மற்றும் கைகளை கத்தியால் துண்டாக வெட்டியதையடுத்து அவர் உயிரிழந்துள்ளார்.அவரின் கழுத்தில் இருந்த தங்க ஆபரணங்களையும் காதிலுள்ள தோட்டை காதுடன் அறுத்தெடுத்து சொப்பின் பையில் போட்டு எடுத்துக் கொண்டு முச்சக்கரவண்டியொன்றில் தப்பியோட முயன்றுள்ளனர்.இதன்போது, அங்கு வீதியில் நின்ற பொதுமக்கள் அவர்களை மடக்கிப் பிடித்துள்ளனர் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதுகைது செய்யப்பட்ட பெண் திருமணம் முடித்துள்ளதாகவும் இவர்கள் வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.அதனையடுத்து, பொலிஸ் தடயவியல் பிரிவு வரவழைக்கப்பட்டு இது தொடர்பான மேலதிக விசாணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.இந்த சம்பவத்தையடுத்து அந்த பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதுடன் பொதுமக்கள் அப்பகுதியில் குவிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டைக் கைப்பற்றி...

தேசிய மக்கள் சக்தி நேற்றையதினம் (20) ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

நாட்டு மக்கள் போதுமான துன்பங்களை அனுபவித்துள்ளதுடன், இலங்கை மக்களின் துன்பங்களில் இருந்து அதிகமான பணத்தை ஊழல் நிறைந்த அரசாங்கம் சம்பாதித்துள்ளது என தெரிவித்தார்.

பொருளாதார வீழ்ச்சியின் விளிம்பில் இருக்கும் நிலையில் நாடு உள்ளது, வெளிப்படைத்தன்மை மட்டுமே ஒரே வழி என்ற அவர், ஒருவர் கிணற்றில் விழுந்தால், கிணற்றின் வாய் வழியாகத்தான் வெளியேற முடியும் என்று குறிப்பிட்டார்.

தங்களால் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியவில்லை என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டும் எனவும் தேசிய மக்கள் சக்தி தற்போது இருக்கும் நிலையில் நாட்டைக் கைப்பற்றத் தயாராக உள்ளது என்றும் தெரிவித்தார்.

ஊழல் அரசாங்கமும் அதிகாரிகளும் அன்டிஜென் சோதனை கருவி இறக்குமதியிலிருந்து போதுமான தரகுப் பணத்தைப் பெற்றதுடன், தனிமைப்படுத்தல் வசதிகள் மூலம் பணம் சம்பாதித்தனர் என்றும் குற்றஞ்சுமத்தினார்.

அவற்றில் இருந்து எடுக்கக்கூடிய பணம் அனைத்தும் முடிந்ததும், நனோ நைட்ரஜன் உர ஒப்பந்தத்தை அதிகாரிகள் கொண்டு வந்தனர். விவசாயிகள் தங்கள் பயிர்களை வளர்ப்பதற்கும் அறுவடை செய்வதற்கும் உரம் இல்லை, நாட்டில் உணவுப் பற்றாக்குறை தெளிவாக உள்ளது, மேலும் அதிகாரிகள் இன்னும் உர ஒப்பந்தத்தின் மூலம் பணம் சம்பாதிக்கிறார்கள் என்று அவர் கூறினார்.

# சீனாவின் ஆதிக்கத்தை...

வடக்கு,கிழக்கு தமிழர்கள், இந்தியா மீது நம்பிக்கையை குழப்புவதற்காகவே சீனாவின் இந்தச் செயற்பாடு அமைவதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, வாவிக்கரை வீதியில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று (20) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் தொடர்ந்தும் கருத்துரைக்கையில், "குறிப்பிட்ட காலமாக யாழ். குடா நாட்டிலும் வடக்கு, கிழக்கிலும் முன்னெடுக்கப்படும் இராஜதந்திர செயற்பாடுகளின் அடிப்படையில் வடக்கை சீனாவுக்கு தாரைவார்த்துவிட்டது போன்று உள்ளது. வடக்கில் சீனாவின் மேலதிக்கம் தொடர்ந்து வருகின்றது.

இலங்கை அரசாங்கம் பொருளாதார ரீதியாக வலுவடைவதற்காக யாழ். குடாவில் உள்ள இந்தியாவுக்கு ஆபத்தாக வரக்கூடிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றதா என்கின்ற சந்தேகம் ஏற்படக்கூடிய சூழ்நிலைகள் உருவாகியுள்ளன.

கடந்தவாரம் கூட சீனாவின் தூதுவர்கள் யாழ். குடாவில் இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்ககூடிய கேந்திர நிலையத்துக்குச் சென்ற விடயம் என்பது இலங்கை ஊடாக இந்தியாவுக்கு செய்தி ஏதும் வழங்கப்பட்டுள்ளதா என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இலங்கை அரசாங்கம் அயல் நாடுகளுக்கு அச்சுறுத்தலையும் பாதுகாப்பு நெருக்கடியையும் ஏற்படுத்தக்கூடிய இராஜதந்திர செயற்பாடுகள் எதையும் முன்னெடுக்கின்றதா என்ற சந்தேகம் வட,கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

தமிழர்களின் பாதுகாப்பை

# 820,000 ஃபைசர்களை...

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக நேற்று (20) ஃபைசர் தடுப்பூசி தொகுதி கொண்டுவரபட்டது. இதுதொடர்பில் தூதரகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முடிந்தளவில் பலருக்கு தடுப்பூசி போடுவதற்கான இலங்கையின் தற்போதைய முயற்சிகளுக்கு அமெரிக்கா ஆதரவளிப்பதாக அமெரிக்க பொறுப்பாளர் மார்ட்டின் கெல்லி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தொற்றுநோயை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், புதிய மாறுபாடுகள் தோன்றுவதைத் தடுப்பதற்கும், வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் பரவலான தடுப்பூசி இன்றியமையாதது.

இலங்கையின் சுகாதார அமைச்சு, யுனிசெப் மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்துடன் இணைந்து, தொற்று நோய் அச்சுறுத்தலுக்கு எதிராக மிகவும் பாதுகாப்பான உலகைக் கட்டியெழுப்ப எங்களால் முடிந்த அனைத்தையும் செய்து வருகிறோம்.

இன்றுவரை, அமெரிக்கா இலங்கை உட்பட 100க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு 300 மில்லியனுக்கும் அதிகமான தடுப்பூசிகளை வெற்றிகரமாக நன்கொடையாக விநியோகித்துள்ளது.

இந்த நன்கொடைகள் கொவிட்-19 தொற்றுநோயை முடிவுக்குக் கொண்டு வரவும், அதன் பேரழிவு தரும் சமூக மற்றும் பொருளாதார தாக்கங்களைத் தணிக்கவும், எதிர்கால வெடிப்புகளுக்கு சிறப்பாக தயாராக இருக்கும் உலகத்தை மீண்டும் உருவாக்கவும் ஜனாதிபதி பைடன் நிர்வாகத்தின் உலகளாவிய முயற்சியின் ஒரு பகுதியாகும்.

இன்றுவரை, இலங்கைக்கு அவசரகால பொருட்கள் மற்றும் முக்கியமான சேவைகளுக்காக 17.9 மில்லியன் டொலர்களை அமெரிக்கா வழங்கியுள்ளது.

கொவிட் பரவலைக் கட்டுப்படுத்தவும், அவசர சுகாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்யவும், தொற்றுநோயின் எதிர்மறையான பொருளாதாரத் தாக்கங்களைக் குறைக்கவும் இந்த உதவி இலங்கையில் உள்ள மில்லியன் கணக்கான மக்களைச் சென்றடைந்துள்ளது என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஏப்ரலில் தரம் 1 ஆரம்பம்

கண்டியில் நேற்றுமுன்தினம் (19) ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது, பாடசாலைகள் எதிர்வரும் டிசெம்பர் 23 அன்று மூடப்பட்டு, புதிய கல்வியாண்டுக்காக 2022ஆம் ஆண்டு ஜனவரி 3ஆம் திகதியன்று மீண்டும் திறக்கப்படும் என தெரிவித்தார்.

கொரோனா காலக்கட்டத்தில் விடுபட்ட பாடத்திட்டங்களை முடிக்க வேண்டியிருப்பதால் முதல் தவணை ஏப்ரல் மாதத்துடன் முடிவடையும் என்ற அவர், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஜனவரி 3ஆம் வாரத்திலும், க.பொ.த உயர்தரப் பரீட்சை பெப்ரவரியிலும், க.பொ.த சாதாரண தரப் பரீட்சை மே மாதம் முதல் ஜூன் மாதம் வரையும் நடைபெறவுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, தரம் ஒன்றிற்கான மாணவர் சேர்க்கை சற்று தாமதித்து ஏப்ரலில் இருந்து உத்தியோகப்பூர்வமாக ஆரம்பிக்கப்படும் என்றும் இது தொடர்பான சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டு தற்போது வழமையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருவதாகவும், பெற்றோர்கள் அதனை பயன்படுத்தி அனுமதிகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டார்.

விடுபட்ட பாடத்திட்டங்களை உள்ளடக்கும் வகையில் ஏனைய தரங்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக வகுப்பறைகள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், தரம் ஒன்று மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை ஏப்ரல் மாதம் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

# கருக்கலைப்புக்குப் பின்...

அதனடிப்படையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலைக்கு இவரது குடும்ப அங்கத்தவர்கள் சென்றிருந்த நிலையில், யோகராசா நிதர்ஷனா (வயது 13) என்ற குறித்த சிறுமி, தாயாருடன் தனிமையில் வீட்டில் இருந்துள்ளார்.

குறித்த சிறுமி அருகில் உள்ள தனது சகோதரியின் வீட்டுக்குச் சென்று ஒளிரவிடப்பட்டிருந்த மின்குமிழ்களை நிறுத்த சென்ற போது கடந்த 15ஆம் திகதி காலை முதல் காணாமல் போயுள்ளதாக, அவரது தாயாரால் அன்றைய தினம் (15) மாலை 2 மணிக்கு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

திருகோணமலையில் உள்ள மாணவர் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்ற குறித்த சிறுமி, கடந்த ஜூலை மாதம் வீடு திரும்பியிருந்தார். அதன்பின்னர் அவர் வீட்டிலேயே குடும்பத்தினருடன் வசித்து வந்திருந்தார்.

காணாமல் போயிருந்த சிறுமி, தனது வீட்டிலிருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் உள்ள பாழடைந்த வளவின் பற்றைக் காணி ஒன்றில் இருந்து, 18ஆம் திகதியன்று, சடலமாக மீட்கப்பட்டார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற பதில் நீதவான் ரி.பரஞ்சோதி முன்னிலையில் கிளிநொச்சி முல்லைத்தீவு பிராந்தியத்துக்கு பொறுப்பான பிரதிப்பொலிஸ் மா அதிபர் தலைமையிலான பொலிஸ் குழுவின் விசாரணையோடு, குறித்த சிறுமியின் சடலம் மீட்கப்பட்டு, உடற்கூற்றுப் பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா முன்னிலையில் சடலம் மீதான பரிசோதனைகள் இடம்பெற்ற நிலையில், சிறுமியின் பெண் உறுப்பில் ஏற்பட்ட காயம் காரணமாகவே உயிரிழப்பு இடம்பெற்றுள்ளது என்று சட்ட வைத்திய அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

அத்தோடு, சடலம் மீதான பரிசோதனையில் சிறுமி 2 மாத கருவுற்றிருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டாரா, கருக்கலைப்புக்கு உட்படுத்தப்பட்டாரா, சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டாரா போன்ற கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக, புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் சிறுமியின் உறவினர் ஒருவர் சனிக்கிழமை (18) கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உள்படுத்தப்பட்டுள்ளதோடு, சிறுமியின் பெற்றோரும் விசாரணைக்காக நேற்று முன்தினம் (19), பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து செல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நஞ்சை வத்தளையில்...

கொழும்பில் நேற்று (20) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்த அவர், நச்சு கொள்கலன்களை கரைக்குக் கொண்டு வருவதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபை அனுமதி வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் கொள்கலன் வடிவமைப்பின்படி, கப்பலுக்குள் சுமார் 10 மெற்றிக் தொன் அதி நச்சுப் பொருட்கள் அடங்கிய 85 கொள்கலன்கள் இருந்ததாகவும், அந்த கொள்கலன்களில் அடையாளம் காணப்படாத அதிக நச்சுப் பொருட்கள் இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

நச்சுத்தன்மை கொண்ட கொள்கலன்களைக் கரைக்கு கொண்டு வர மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம், கடந்த ஒக்டோபர் 29ஆம் திகதி அனுமதி வழங்கியதாகவும், அனுமதி பெற்ற உள்ளூர் நிறுவனத்துக்கு அவ்வாறான நச்சுக்களை கையாள்வதற்கான அனுமதிப்பத்திரம் இல்லை எனவும் ஜாகொட சுட்டிக்காட்டினார்.

இலங்கை கடற்பரப்பில் வைத்து எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் கொள்கலன்களைப் பிரித்தெடுக்க சிங்கப்பூர் நிறுவனமொன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், இலங்கை கடல் எல்லை கடுமையாக பாதிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

# ரஞ்சனுக்கு பாராளுமன்ற...

நேற்று (20) வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை பார்வையிட சென்ற போதே, ஊடகங்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், திருடியதாலோ அல்லது தவறான நடத்தைக்காகவோ ரஞ்சன் ராமநாயக்க சிறையில் அடைக்கப்படவில்லை எனவும் அவர் எப்போதும் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர் எனவும் குறிப்பிட்டார்.

ஆனால் நாட்டில் சீனி மோசடி, எண்ணெய் மோசடி செய்தவர்கள், சமையல் எரிவாயு மோசடியுடன் தொடர்புடைய அனைவரும் தலைமறைவாக இருக்கும் போது, மக்களுக்காக உண்மையை பேசிய ரஞ்சன் ராமநாயக்க மாத்திரம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் என்றார்.

மக்கள் சார்பான மனிதாபிமானமிக்க பிரமுகராக அறியப்படும் ரஞ்சன் ராமநாயக்க, தனது சமூக சேவைக்காகவேனும் விடுதலை செய்யப்பட வேண்டும் என மீண்டும் ஒரு தடவை கோரிக்கை விடுப்பதாகத் தெரிவித்த அவர், ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலைக்காக மீண்டும் ஜனநாயக ரீதியிலான போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

# 847 வெடிப்புகள் பதிவு:...

லிட்ரோ எரிவாயு சிலிண்டர்கள் சம்பந்தப்பட்ட வெடிப்புகளால் மொத்தமாக 797 சம்பவங்களும் லாஃப்ஸ் எரிவாயு கசிவுகள் தொடர்பாக 50 வெடிப்புகளும் பதிவாகியுள்ளன என்பதுடன், இந்த ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி முதல் நேற்றுவரையான காலப்பகுதிக்குள் 18 சொத்துகளும் எரிவாயு வெடிப்புகளால் சேதமடைந்துள்ளன.

எரிவாயு அடுப்பு வெடிப்புகள் காரணமாக 477 சம்பவங்களும் எரிவாயு கசிவு தொடர்பில் 299 சம்பவங்களும் எரிவாயு குழாய் சேதங்கள் தொடர்பில் 52 வெடிப்புச் சம்பவங்களும் பதிவாகியுள்ளதாக அறிக்கை ஒன்றின் மூலம் அறியமுடிகிறது.

ரெகுலேட்டர்களில் ஏற்பட்ட சேதம் காரணமாக பதினைந்து சம்பவங்களும் எரிவாயு சிலிண்டர்கள் சேதமடைந்த சம்பவங்கள் இந்த ஆண்டும் பதிவாகியுள்ளன.

எரிவாயு வெடிப்பினால் தலத்துஓயா, மருதானை, வெலிக்கடை, கொட்டாவ, கந்தபொல, மாத்தளை மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தோரே உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இப்படியும் நடக்கிறது

குறித்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றை பொலிஸார் முற்றுகையிட்டு சோதனையின் போது கசிப்புடன் பெண்ணொருவரை கைது செய்தனர்.

இதேவேளை, குறித்த வீட்டின் சமையலறையில் சோதனையிட்ட பொலிஸார், அங்கிருந்த எரிவாயு சிலிண்டரில், மஞ்சல் துணியொன்றில் காசு கட்டப்பட்டுள்ளதை அவதானித்துள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸார் விசாரித்தபோது எரிவாயு சிலிண்டர் அடுப்பு வெடித்துவிடக் கூடாதென கடவுளுக்கு நேந்து காசு கட்டியுள்ளதாக அப்பெண் விளக்கமளித்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

# அனுரகுமார குரல் கொடுப்பது...

நேற்று முன்தினம் (19) கண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், 6.7 மில்லியன் டொலர் பிரச்சினைகளுக்கு மத்தியில் நட்பு நாடொன்றை கோபித்துக்கொள்வதா, இல்லையாயின் அந்த பணத்தைச் செலுத்தி ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு அமைய சட்டரீதியாக தீர்த்துக்கொள்வதா என்ற கேள்வி வந்த போது சீனாவுடன் இருக்கும் நடபுறவை பாதுகாப்பது முக்கிய வியடமாக கருதப்பட்டது என்றார்.

மலத்துக்கு பணம் கொடுத்ததாகத் தெரிவித்து எவரையும் விமர்சிப்பது இலகு என தெரிவித்த அமைச்சர், ஆனால் ஒரு பிரபல நாட்டை புண்படுத்துவது மிகவும் பாதகமானது என்பதை புரிந்துக்கொள்ள வேண்டும் என குறிப்பிட்டார்.

எமக்கு தேவை ஏற்படும் போது 1.5 பில்லியன் டொலரை சீனாவே வழங்கியது. அதற்கமைய சீனாவை பகைத்துக்கொள்வதற்கு பதிலாக அந்த நட்டஈட்டை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது என்று தெரிவித்தார்.

மேலும் எதிர்கட்சியின் பிரார்த்தனையைப் போல் நாடு மோசமாவதற்கு அரசாங்கம் இடமளிக்காது என தெரிவித்த அவர், கடந்த வருடம் எம்மால் கடனைச் செலுத்த முடியாதென சிலர் தெரிவித்த நிலையில் நாம் எவ்வித சிக்கலும் இன்றி அந்த கடனை செலுத்தினோம் என்றார்.

# பதுளை மாணவி மாயம்

பதுளை மாநகரில் இடம்பெறும் மேலதிக வகுப்பொன்றுக்கு நேற்று முன்தினம் (19) சென்ற குறித்த மாணவி, வீடு திரும்பவில்லையென்று முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பதுளை □ கலன் பெருந்தோட்டத்தைச் சேர்ந்த மாணவி, மேலதிக வகுப்புக்கு எடுத்து வந்ததாகக் கூறப்படும் பாடசாலை புத்தகப்பை மற்றும் பாதணிகள் ஆகியவை பதுளை - கோபோ பகுதியின் நீர் நிலையொன்றின் அருகே, (தெப்டக்குளம்) இருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், தோட்ட இளைஞர்கள் குழுவொன்று, மேற்படி நீர் நிலையில் தேடுதல்களை மேற்கொண்டுள்ள போதும் இதுவரை மாணவி குறித்து எந்த தகவலும் கிடைக்கப்பெறவில்லை.

காணாமல் போன மாணவி, நீர் நிலையில் விழுந்திருக்க கூடுமென என்ற சந்தேகம் எழுப்பட்டிருப்பதால், மாணவியின் தாயாரும் உறவினர்களும், பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமாரிடம் செய்த புகாரையடுத்து, தேடுதல்களை உடன் மேற்கொள்ளுமாறு, பதுளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அவசர கடிதமொன்றினை எம்.பி அனுப்பியுள்ளார்.

அத்துடன், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் நேரடியாகவும், இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் வலியுறுத்தியுள்ளார்.

இதனையடுத்து, பதுளை பொலிஸ்சார் சுழியோடிகள் சகிதம் குறிப்பிட்ட நீர் நிலை பகுதிக்கு சென்றுள்ளனர்.

குறித்த மாணவி குறிப்பிட்ட நீர் நிலையில் விழுந்து தற்கொலை செய்துள்ளாரா அல்லது திசை திருப்பும் வகையில் அவரது புத்தகப்பை, பாதணிகள் ஆகியவற்றை நீர் நிலை அருகில் போடப்பட்டு கடத்தப்பட்டாரா என்ற வகையில் பொலிஸார் இரு கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் எரிபொருளை பொருளுக்கு

# கூப்பன் முறை

## அறிமுகப்படுத்துமாறு அமைச்சர் வாசு ஆலோசனை



அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு கூப்பன் முறை ஒன்றை அரசாங்கம் அறிமுகம் செய்ய வேண்டுமென அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வை மக்களால் தாங்கிக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அத்தியாவசியப் பொருள்களை குறைந்த வருமானங்களைப் பெறும் குடும்பங்களுக்கு கூப்பன் முறையில் வழங்க வேண்டுமென தான் யோசனை ஒன்றை முன்வைப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், எரிபொருளின் விலையும் உலக சந்தையில் அதிகரித்துள்ளது. இதனால் எரிபொருள் இறக்குமதியிலும் பிரச்சினைகள் எழுந்துள்ளன. எனவே, எரிபொருள் நிரப்புவதற்கு கூப்பன் முறை ஒன்றை அறிமுகப்படுத்துவதனூடாக எரிபொருள் பாவனையை குறைக்க வேண்டும் ஆலோசனை வழங்கினார்.

கூப்பன் முறையை பயன்படுத்தி வரிசையில் மக்கள் காத்திருக்க நேர்ந்தாலும், அத்தியாவசியப் பொருள்களை குறைந்த விலைக்குப் பெற்றுகொள்ள முடியும் எனவும், பணம் இருப்பவர்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை சந்தையில் வேண்டிய விலைகளில் பெற்றுகொள்ள முடியும் எனவும் கூறினார்.

கோட்டா, பெசிலின் வங்கிக் கணக்கிலிருந்து

# சீனாவின் மலக்கழிவுகளுக்கு பணம் செலுத்தப்படாது

சீன உரக் கப்பலுக்கு நட்டஈடாக நாட்டு மக்களின் வரிப் பணமே வழங்கப்பட உள்ளதாக தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, ஜனாதிபதி, நிதி அமைச்சரின் அமெரிக்க வங்கிக் கணக்கிலிருந்து பணம் அறிவிடப்படாது எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், சீன உரக் கப்பலுக்கு நட்டஈட்டை வழங்கும்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவின் அமெரிக்காவில் உள்ள வங்கிக் கணக்கிலிருந்து பணம் அறவிடுவதில்லை என்றார்.

மக்களின் பணமே இதற்கு வழங்கப்பட உள்ளது. மக்கள் பருப்பு வாங்கும்போதும், சீனி வாங்கும்போது, ரிலோட் செய்யும்போதும் வரியாக அறிவிடப்பட்டு சேர்க்கப்பட்ட பணமே நட்டஈடாக வழங்கப்பட உள்ளது எனவும் தெரிவித்தார்.

சீனாவின் மலக் கழிவுக்கு இலங்கை மக்கள் பணம் செலுத்த வேண்டுமென எவரும் நினைத்திருக்க மாட்டார்கள் எனவும் தெரிவித்தார்.

இலங்கைக் கடற்படைக்கு

# அவுஸ்திரேலியா நன்றி நவிழ்ந்தது




கடல்சார் ஆட்கடத்தில் உள்ளிட்ட பிற நாடுகடந்த குற்றங்கள் உள்ளிட்ட கடல்சார் குற்றங்களை எதிர்த்து இலங்கைக் கடற்படையினர் போராடுவதற்காக அவுஸ்திரேலிய அரசாங்கம், கடற்படையினருக்கு நன்றிகளை தெரிவித்துள்ளது.

பிராந்திய எல்லைப் பாதுகாப்பை விரிவாக்குவதற்கு அவுஸ்திரேலிய, இலங்கை அரசாங்கங்கள் மீண்டும் கைக்கோர்த்துள்ளன. இதன்படி, கொழும்புக்கு அருகில் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தில் இலங்கை எல்லையோர ஆபத்து மதிப்பீட்டு நிலையம் நேற்று (20) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவுஸ்திரேலியாவின் உள்நாட்டு விவகாரங்களுக்கான அமைச்சர் கெரன் அன்ரூஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், இரு நாடுகளுக்கிடையிலான உறவில் மற்றொரு முக்கியமான மைல்கல்லாக இலங்கை எல்லையோர ஆபத்து மதிப்பீட்டு நிலையம் இருக்கும் எனவும் கூறியுள்ளார்.

பிராந்திய குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கும், முறையான வர்த்தகம், பயணத்தை எளிதாக்குவதற்கும் அவுஸ்திரேலியாவும் இலங்கையும் மேற்கொண்ட கூட்டு அணுகுமுறையின் சமீபத்திய உதாரணமாக இந்நிலையம் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடல்சார் ஆட்கடத்தில் உள்ளிட்ட பிற நாடுகடந்த குற்றங்கள் உள்ளிட்ட கடல்சார் குற்றங்களை எதிர்த்து இலங்கைக் கடற்படையினர் போராடுவதற்காக அவர் இதன்போது நன்றியையும் தெரிவித்தார்.

தன்னம்பிக்கையுடன் தனித்து

# இராணுவத்தினர் நிற்க வேண்டும்




இராணுவத்தினர் தொழில்முறை வளர்ச்சிப் பாதையில் முன்னேற்றம் காணும்போது எந்த அழுத்தங்களையும் உள்வாங்கும் திறன் கொண்டவராக தன்னம்பிக்கையுடன் தனித்து நிற்க வேண்டுமென இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா, இராணுவத்தினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

தியத்தலாவையிலுள்ள இராணுவ கல்வியற் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு தொடர்ந்து கருத்துரைத்த அவர், தேசிய மற்றும் நிறுவனம் சார்ந்த இலக்குகளை அடைவதாக உறுதிமொழி எடுத்துகொண்டதன் பின்னர் தனக்குக் கீழ் பணிபுரிவோரை சரியான முறையில் வழிநடத்த வேண்டும் எனவும் தெரிவித்த அவர், சிவில் நபரொருவர் இராணுவ அதிகாரியாக மாற்றப்படுவதன் முக்கியத்துவம் தொடர்பிலும் எடுத்துரைத்தார்.

இராணுவத்தினரின் செயற்பாடுகள் தரம் மற்றும் சமத்துவம், நோக்கம், ஒற்றுமை, அர்ப்பணிப்பு ஆகியவற்றை கருத்திற்கொண்டே நிர்ணயிக்கப்படுகிறது. அதிகளவு பொறுமை, இரக்கம், வெளிபாட்டுடன் மற்றவர்களின் தேவைகளை செவிமெடுக்க சிறந்த மனப்பாங்கை கொண்டிருக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.





# நத்தார் விழா...

கேகாலை புனித மரியாள் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்ற நத்தார் விழாவில் அலரி மாளிகையிலிருந்து ஸூம் தொழில்நுட்பம் ஊடாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அவரது பாரியார் பங்கேற்றனர்

# சுற்றுலாப் பயணிகள் மீறுகின்றனர்

சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை

■ டி.சந்ரு

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் நுவரெலியாவுக்கு கடந்த வார இறுதியில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகைத்தந்துள்ளனர்.

நுவரெலியாவில் சுற்றுத்திருந்த சுற்றுலாப் பயணிகளில் அதிகமானோர் முகக்கவசம் அணியாமல், சமூக இடைவெளியையும் போணாமல் சுகாதார வழிக்காட்டல் முறைகளை மீறி அலட்சியமாகச் செயற்படுவதை அவதானிக்க முடிந்தது.

நுவரெலியா - பதுளை பிரதான வீதியெங்கு வெளிமாவட்ட இலக்கத்தகடு பதிக்கப்பட்ட வாகனங்கள் அணிவகுத்து சென்றமையால் வார இறுதி நாட்களில் பிரதான வீதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது .

இவ்வாறான நிலைமைகளால் நுவரெலியா நகரை அண்டியப் பகுதிகளில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் ஏற்படுமோ என்கிற அச்சம் ஏற்பட்டுள்ளது.



# ஊடகத்துறை அமைச்சர் ஊடகங்களிடம் வேண்டுகோள்



இளைஞர் பாராளுமன்ற நிகழ்வுகளை ஊடகங்களில் வெளிகொணர வேண்டுமென வெகுசன ஊடக அமைச்சர் டளஸ் அழகபெரும, ஊடகங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாகாண சபையின் சபை அமர்வுகளில் இரு கட்சிக்காரர்கள் தாக்கிக்கொள்வதையும், பாராளுமன்றத்தின் புலி, நரி, நாய் என ஒருவரையொருவர் திட்டுவதையும் ஊடகங்கள் வெளியிடுகின்றன எனத் தெரிவித்த அவர், இவற்றையும் வெளியிட வேண்டாமென கூறப்போவதில்லை என்றார்.

இந்த விடயங்களை ஊடகங்களில் வெளியிடுவதுபோல இளைஞர் பாராளுமன்றத்தில் வடக்கு, தெற்கில் உள்ள இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள், நாடு தொடர்பில் முன்வைக்கும் கருத்துக்களையும் ஊடகங்களில் வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

இவ்வாறு ஊடகங்களில் வெளிவரும் போதுதான், பாராளுமன்றத்தில் உள்ள எங்களுக்கு பாராளுமன்றத்தில் என்ன பேச வேண்டும் என்பது தெரியும். எனவே, இளைஞர் பாராளுமன்ற விடயங்களை ஊடகங்களில் வெளியிட வேண்டும் என ஊடகங்களிடம் தான் கோரிக்கை விடுப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, இளைஞர் பாராளுமன்றம், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# நாட்டை முடக்காது இருப்பதே வெற்றி




நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கைக் குறைவடைந்து வருகிறதென தெரிவிக்கும் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத், நாட்டு மக்கள் தொடர்ந்து சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களைப் பின்பற்றி வந்தால் தொற்றாளர்கள் எண்ணிக்கை தொடர்ந்து குறைவடையும் எனவும் கூறினார்.

நாட்டை முடக்காது கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையை குறைக்க முடியுமாக இருந்தால், அதுவே நாட்டுக்குக் கிடைக்கும் மிகப்பெரிய வெற்றி என்ற்ர.

கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமாக இருந்தால் நாட்டின் பொருளாதாரம், பிள்ளைகளின் கல்வி செயற்பாடுகள் என அனைத்தும் பாதிக்கும் எனவும் கூறினார்.

கொரோனா வைரஸ் தடுப்பூசிசெலுத்திக்கொள்ளா தவர்களிடமிருந்து வைரஸ் வேகமாகப் பரவக்கூடும் என்பதால், தடுப்பூசிகளை செலுத்திக்கொ ள்ளாதவர்கள் பொது இடங்களில் செல்வதை தவிர்க்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

# எரிபொருள்களின் விலைகளை அதிகரிக்கவும்

## நிதியமைச்சருக்கு அஜிட் நிவாட் கடிதம்

எரிபொருட்களின் விலைகளை உடனடியாக அதிகரிக்கவேண்டுமென இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜிட் நிவாட் கப்ரால், நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவுக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளார்.

இந்தக் கடிதம் கடந்த 10ஆம் திகதியன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இலங்கை முகங்கொடுத்திருக்கும் பொருளாதார சிக்களுக்கு மத்தியில் எரிபொருள்களை இறக்குமதிச் செய்வதற்கு ஐக்கிய அமெரிக்க டொலர்களை பயன்படுத்தினால், அந்நிய செலாவணி இல்லாமல், நாடு பெரும் பிரச்சினைக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படும்.

அதனால், ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 35 ரூபாவினாலும், ஒரு லீற்றர் டீசலின் விலை 24 ரூபாவினாலும் மண்ணெண்ணை ஒரு லீற்றரின் விலையை 11 ரூபாவினாலும் அதிகரித்தால் மட்டுமே நிர்வகிக்கமுடியும் என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும், இந்த கோரிக்கைக்கு நிதியமைச்சரிடமிருந்து இருந்து எவ்விதமான பதிலும் இதுவரையிலும் கிடைக்கவில்லையென அறியமுடிகின்றது.



# மன்னா ரமேஷ் கைது



நபர் ஒருவரை சுட்டுக்கொன்று புதைத்த சம்பவம் தொடர்பில், பொலிஸ் அதிரடிப்படையால் அவிசாவளை நாபெல்லவைச் சேர்ந்த மன்ன ரமேஷ் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, கொலை சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கியையும் அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர்.

மன்ன ரமேஷின் வீட்டின் பின்பகுதியில் இந்த துப்பாக்கிப் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. இதேவேளை கைது செய்யப்பட்ட சந்தேகநபர் அவிசாவளை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட நபரின் சடலம் புதைக்கப்பட்ட இடம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளதோடு, அதனை தோண்டியெடுப்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# சிக்கலாயின் சஜித்தே பொறுப்பு



தற்போதைய அரசாங்கத்தின் கீழ் வீடமைப்பு அமைச்சின் பணிகளில் ஏதேனும் சிக்கல் இருக்குமாக இருந்தால் அதற்கு முன்னாள் வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாஸவே பொறுப்புக்கூற வேண்டும் என இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்த தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் 20 ஆயிரம் புதிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. நாட்டிலுள்ள 45 ஆயிரம் தற்காலிக வீடுகள் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்கப்படும் எனவும் கூறினார்.

அரசாங்கம் அமைதியாக பாரிய அளவிலான அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. எனினும் இது தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு இல்லை எனவும் கூறினார்.

சீன தூதுவரின் கருத்தில்

# ‘கரிசனை கொண்டுள்ளோம்’

■ க. அகரன்

சீன தூதுவர் வடக்கில் தெரிவித்த கருத்தில் கரிசனை கொண்டுள்ளோம் என, பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

ஓமந்தை மத்திய கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் சீன தூதுவரின் வடக்கு விஜயம் தொடர்பாக ஊடகவியலாளரினால் கேள்வி கேட்டபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், இலங்கை சுயாதீனமான சுதந்திரமான நாடு என்ற ரீதியிலும் எங்களுடைய எதிர்காலத்துக்காகவும் வெளிவிவகார உறவினை தங்களுடைய நாட்டின் பெருமைக்காகவும் தனித்தன்மைக்காகவும் பாவிக்க வேண்டியதாக உள்ளது என்றார்.

இலங்கை ஒரு நாட்டின் பகடைக்காயாக மாறக்கூடாது எனத் தெரிவித்த அவர், அண்மையில் இடம்பெற்ற சீனத்தூதுவரின் விஜயம் கேள்விக்குறியாக இருக்கிறது என்பதை விட, அவர் அங்கே கூறிய கருத்துகள் தமக்கு கரிசனையாக இருக்கின்றன எனவும் கூறினார்.



‘அவை இந்தியாவையும் இலங்கையையும் பகை செய்யும் விடயங்களாக சிலர் ஊடகங்களில் சொல்லியிருக்கிறார்கள். இந்தியா எங்களுடைய தொப்புள்கொடி உறவு, எங்களுடைய உண்மையான தாய்நாடு, அங்கிருந்து வந்த மதம், மொழி எல்லாமே எங்களுக்கு சொந்தமாகியிருக்கிறது’ எனவும், சுரென் எம்.பி தெரிவித்தார்.

எனவே இந்தியாவுடனான உறவை முறிவடைய விடக்கூடாது என்ற நம்பிக்கையில் தான் இருப்பதாகவும், வருகின்ற நாள்களில் இந்த அரசியல் விடயம் குறித்து மிக கவனமாக இருக்க வேண்டும் எனவும், அவர் தெரிவித்தார்.



# 43 இந்திய மீனவர்களுக்கும் விளக்கமறியல்

■ எஸ். நிதர்ஷன்

இலங்கை கடற்பரப்பில் கைதான 43 இந்திய மீனவர்களையும், எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம, நேற்று முன்தினம் (19) உத்தரவிட்டுள்ளது.

இதனையடுத்து, குறித்த இந்திய மீனவர்கள், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் (19) அதிகாலை, யாழ்ப்பாணம் - நெடுந்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த போது,குறித்த 43 இந்திய மீனவர்களும், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டதுடன், 6 படகுகளும் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிணற்றிலிருந்து

# சிறுமி சடலமாக மீட்பு



■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி - அம்பாள்நகர் பகுதியில், நேற்று முன்தினம் (19), விளையாடிக் கொண்டிருந்த 4 வயது சிறுமி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

விளையாடிக்கொண்டிருந்த சிறுமி, காணாமல் போயிருந்த நிலையில் தேடப்பட்டு வந்தார்.

இந்நிலையில், வீட்டு கிணற்றை நீர் பம்பியில் மூலம் இறைக்கப்பட்ட போது, குறித்த சிறுமி கிணற்றுக்குள் சடலமாக அடையாளம் காணப்பட்டார்.

டசிந்தன் சன்சிகா என்ற 04 வயதுடைய சிறுமியே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரனைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நாமலின் பெயரை பயன்படுத்தி

# தற்காலிக வீடு தீக்கிரை



■ மு. தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ9 வீதியில் நீதிமன்ற கட்டிடத்துக்கு அருகில், அரச காணியை சட்ட ரீதியாக நீண்டநாள் குத்தகையில் பெற்று வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றவரின் தற்காலிக வீடு, நேற்று முன்தினம் இரவு(19) தீக்கிரையாக்கப்பட்டு உள்ளது.

அத்துடன், உடைமைகளுக்கும் சேதமாக்கப்பட்டுள்ளதாக

தெரிவித்த பாதிக்கப்பட்டவர்கள், நாமலின் ஆள் தான் எனக் கூறி வந்த தர்மசிறி என்பவரே, இவ்வாறு நடந்துகொண்டதாகவும் பொலிஸ் நிலையத்தில்

முறைப்பாடு செய் துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த காணியினை அபகரிக்கும் முயற்சியில் இதற்கு முன்னரும் பல தடவைகள், நாமலின் பெயரை பயன்படுத்தி, குறித்த நபர் எம்மை அச்சுறுத்தி தாக்கிம் உள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டும் உள்ளது. ஆனால் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுப்பதில் அக்கறையின்றி உள்ளனர் எனவும், பாதிக்கப்பட்டோர் தெரிவித்தனர்.

நாமல் ராஜபக்ஷவின் ஆட்கள் நாங்கள் என்று கூறிய தர்மசிறி என்ற நபர், நேற்று முன்தினம் மாலை, எமது இடத்துக்கு வருகை தந்து இந்த காணியில் எந்த அபிவிருத்தியும் செய்யக்கூடாது மீறி செய்தால் வீட்டோடு அனைவரையும் தீயிட்டு கொளுத்தி விடுவேன் என்று அச்சுறுத்தினார் எனவும், பாதிக்கப்பட்டவர்கள் கூறினர்.

நாமல் ராஜபக்ஷவின் ஆட்கள் நாங்கள் என்று கூறிய தர்மசிறி என்ற நபர் கடந்த முறையும் வீட்டில் உள்ளவர்களை கட்டி வைத்து அடித்து விட்டு பொருள்களை சேதப்படுத்தியதோடு, துப்பாக்கிகளையும் காட்டி மிரட்டி சென்றுள்ளனர் என்றும் தெரிவித்தனர்.

# மன்னார் வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பு



■ றொசேரியன் லெம்பேட்

மன்னார் பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் அரச வைத்தியர்கள், நேற்று (20) காலை தொடக்கம், பணிப்புறக்கணிப்பு போராட்டமொன்றை மேற்கொண்டனர்.

மத்திய சுகாதார திணைக்களத்தின் ஊடாக கடந்த 13ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட பணியிடை மாற்றம் ஒழுங்கான முறையில் இடம்பெறவில்லை எனவும் குறித்த இடமாற்றம் தொடர்பாக மாவட்ட ரீதியில் உள்ள வைத்தியசாலை நிர்வாகத்தினரின் எந்தவித ஆலோசனையும் மேற்கொள்ளாது வைத்தியர் தேவை உள்ள இடங்களை புறக்கணித்து, தேவையற்ற இடங்களுக்கு வைத்தியர்களை நியமித்துள்ளதாகவும் தெரிவித்தே, குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது

இரத்தினபுரி, நுவரெலியா, பொலன்னறுவை, திருகோணமலை, மன்னார் ஆகிய மாவட்டங்களில், குறித்த முறையற்ற பணியிட மாற்றம் இடம்பெற்றுள்ளதாகவும் எனவே, அரசாங்கம் பணியிட மாற்றத்தை இரத்து செய்து மாவட்ட ரீதியில் உள்ள வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் கலந்தாலோசித்து தேவை உள்ள இடங்களுக்கு இடமாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் கடந்த 13ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இடமாற்றத்தை இரத்து செய்யுமாறும் கோரி, அரச வைத்திய அதிகாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்

அப்பாவி மக்களைப் பற்றி

# சிந்திக்காத அரசாங்கம்

## பாரமெடுக்க ஐக்கிய மக்கள் சக்தி தயார்

■ நூருல் ஹுதா உமர், எம்.சி அன்சார்

தற்போதைய அரசாங்கம் அப்பாவி மக்களை பற்றி சிந்திப்பதில்லை எனத் தெரிவித்த குருநாகல் மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினருமான நளின் பண்டார, இனவாதத்தைக் கிளறி, ஆட்சியைக் கைப்பற்றிய இந்த அரசாங்கம் கொலை, கொள்ளைகளை செய்வதாகவும் குற்றஞ்சாட்டினார்.

அத்தோடு, அரசாங்கத்தை பாரமெடுக்க ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் தயாராக உள்ளோம் என்றும் அதன் பின்னர் மக்களின் பிரச்சினைகளை சுமூகமாகத் தீர்த்து வைப்போம் என்றும் தெரிவித்த அவர், இந்த நாட்டை ஊழல் இல்லாமல் ஆட்சி செய்ய ஐக்கிய மக்கள் சக்தித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் முடியும் என்றார்.

சம்மாந்துறை பிரதேச விவசாயிகளின் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடலொன்று, ஐக்கிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை தேர்தல் தொகுதியின் பிரதம அமைப்பாளர் எம்.ஏ. ஹஸனலியின் தலைமையில், சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் நேற்று முன்தினம் (19) மாலை இடம்பெற்றது.




இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், “பசளை, கிருமிநாசிகள் என எதுவுமில்லாது விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர். இந்தப் பிரச்சினைகளுக்கு காரணம் கோட்டாபய இந்நாட்டின் ஜனாதிபதியானதே. அவர் முன்வைக்கும் திட்டங்கள் யாவும் மூடத்தனமாக உள்ளன.

“நாட்டில் இப்போது எரிவாயு, பால்மா, மரக்கறி, எரிபொருள், டொலர் என எதுவுமில்லை. வரிசையில் நின்று மக்கள் அத்தியாவசியப் பொருள் வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

“விவசாயம் என்பது நெற்செய்கை மட்டுமல்ல. மரக்கறி முதல் ஏற்றுமதி பயிர்கள் என எல்லாம் அதில் அடங்கும். எதிர்வரும் புது வருடத்தில் இருந்து சோற்றுக்கு மிகப்பெரிய பஞ்சம் ஏற்படும். சீனி முதல் பல்வேறு பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்புள்ளது. கடந்த காலங்களில் சீனியில் பாரிய மோசடி நடந்தது. இப்போது விவசாயிகளை காட்டி, இந்த அரசாங்கம் கடுமையாக கொள்ளையடிக்கிறது.

“இலங்கையில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் ஒற்றுமையாகவே வாழ்கிறார்கள். அவர்களின் ஒற்றுமையை சீரழிப்பது அரசியல்வாதிகளே. ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாஸ மக்களை ஒற்றுமையாக வாழச்செய்ய பல்வேறு திட்டங்களை வைத்துள்ளார்.

“விவசாயிகளுக்கு தேவையானவற்றை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி அரசினால் முடியும். அதனால் ஐக்கிய மக்கள் சக்தியை பலப்படுத்த எல்லோரும் எங்களின் விவசாய அமைப்புக்களுடனும் கட்சியுடனும் இணைந்து பயணியுங்கள்” என்று அழைப்பு விடுத்தார்.





## திருவாதிரை தீர்த்தோற்சவம்

இந்துக்கள் அனுஷ்டிக்கும் சிவ விரதங்களுள் ஒன்றான திருவெம்பாவை விரதத்தின் இறுதிநாள் நிகழ்வான திருவாதிரை தீர்த்தோற்சவம், காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவிலில் நேற்று (20) நடைபெற்றது.

கடந்த 09 நாள்களாக கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்றுவந்த திருவெம்பாவை விரத பூஜையானது, நேற்று கோவில் தீர்த்தக் கிணற்றில் திருவாதிரை தீர்த்தமாடுவதுடன் நிறைவடைந்தது.

வி.ரி.சகாதேவராஜா

காட்டு யானை தாக்கி

# பூப்பந்து நடுவர் மயூரன் பலி

■ அ.அச்சுதன்



வவுனியாவில் இருந்து திருகோணமலை நோக்கி வந்துகொண்டிருந்த போது காட்டு யானை தாக்கியதில் 37 வயதான பூப்பந்தாட்ட நடுவர் ஒருவர், நேற்று முன்தினம் (19) மாலை உயிரிழந்துள்ளார் என்று கெப்பத்திகொல்லாவ பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலையைச் சேர்ந்த சிவபாலசுந்தரம் மயூரன் என்பவரே உயிரிழந்துள்ளார் என்பதுடன், கொழும்பில் இடம்பெற்றுவரும் 69ஆவது தேசிய பூப்பந்தாட்ட நிகழ்வின் நடுவராக செயற்பட்டுவருகிறார் என்றும் தெரியவந்துள்ளது.

கொழும்பில் இருந்து வவுனியாவுக்கு ரயில் வந்த அவர், திருகோணமலையை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போதே வீதியைக் கடக்க முயன்ற காட்டு யானை தாக்கியுள்ளது என்று தெரிவித்த கெப்பத்திகொல்லாவ பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிஞ்சாக்கேணி

# பஸ் சேவை ஆரம்பம்

■ தீஷான் அஹமட்

குறிஞ்சாக்கேணியிலிருந்து கிண்ணியாவுக்கு பாடசாலை செல்லும் மாணவர்களுக்கான இலவச பஸ் சேவை, நேற்று (20) காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறிஞ்சாக்கேணி பால புனரமைப்பு வேலைகள் நிறைவடையும்வரை இந்த பஸ் சேவையை வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்னெடுக்கவுள்ளது.

குறிஞ்சாக்கேணி பாதுகாப்பற்ற இழுவைப் படகு விபத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட 08 பேர், கடந்த மாதம் உயிரிழந்தனர்.



இதனால் குறிஞ்சாக்கேணியிலிருந்து கிண்ணியாவுக்கு பாடசாலை செல்வதற்கு மாணவர்கள் படகு சேவையில் பயணிப்பதற்கு அச்சம் கொண்டிருந்த நிலையில் இந்த இலவச பஸ் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

எனினும், குறிஞ்சாக்கேணியிலிருந்து கிண்ணியாவுக்கான படகு சேவை கடற்படையினரால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கந்தளாய் தள

# வைத்தியசாலையினும் பணிப் பகிஷ்கரிப்பு

■ எப்.முபாரக்

ஐந்து மாவட்டங்களில் உள்ள அரச வைத்தியசாலைகளின் வைத்தியர்கள் 24 மணித்தியால அடையாள பணிப் பகிஷ்கரிப்பில் நேற்று (20) ஈடுபட்டனர்.

இதன்படி, திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் தள வைத்தியசாலையின் வைத்தியர்களும் இந்த அடையாள பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதோடு, வெளி நோயாளர் பகுதிகள் மற்றும் சத்திர சிகிச்சை கூடங்களும் செயற்படவில்லை.



# பெரகலை பெருவிழா

**எம். செல்வராஜா**

பெரகலை- கருவேற்காடு பதிஸ்ரீ கருமாரியம்மன் கோவிலில், எதிர்வரும் 25ஆம் திகதி மஹாமண்டல சக்திப்பூஜைப் பெருவிழா இடம்பெறவுள்ளது.

மேற்படி கோவிலின் பிரதம குரு பிரம்மஸ்ரீ பாலமூர்த்தீஸ்வரக் குருக்கள் தலைமையில், இம் மஹாமண்டல சக்திப்பூஜைப் பெருவிழா நடைபெறும்.

பதுளை மாவட்டத்திலிருந்து ஐயப்பசுவாமியை தரிசிக்கச்செல்லும் அனைத்து அடியார் சுவாமிகளும் இப்பூஜையில் கலந்துகொள்ளவுள்ளனர். அத்துடன், கருவேற்காடுபதி ஸ்ரீகருமாரியம்மனுக்கு ஸ்நபன மஹா அபிஷேகம், வசந்தமண்டபப்பூஜைகள், அதைத் தொடர்ந்து அம்பாள் உள்வீதிவலம் வரும் அருட்காட்சியும் இடம்பெற்று அடியார்கள் அனைவருக்கும் அன்னதானமும் வழங்கப்படும்.



தலவாக்கலை– லிந்துலை நகரசபையில்

# பாரதிதாசனின் பட்ஜெட் மீண்டும் தோல்வி

## ஆளுங்கட்சி உறுப்பினர்களே எதிராக வாக்களிப்பு

**ரஞ்சித் ராஜபக்ஷ**

தலவாக்கலை- லிந்துலை நகர சபையின் அடுத்தாண்டுக்கான பட்ஜெட் மதிப்பீடானது இரண்டாவது தடவையாகவும் நேற்று (20) இரண்டு வாக்குகளால் தோல்வியடைந்துள்ளது.

தலவாக்கலை- லிந்துலை நகர சபையின் தவிசாளர் எல். பாரதிதாசனால் இந்த மாதம் 7ஆம் திகதி அடுத்தாண்டுக்கான பட்ஜெட் யோசனை முன்வைக்கப்பட்டது. இந்நிலையில், ஆளுங்கட்சியில் உறுப்பினர் ஒருவர் இதற்கு எதிராக வாக்களித்தமையால் பட்ஜெட் யோசனை தோல்வியடைந்தது.



இந்த நிலையில், நேற்று (20) சபையின் தவிசாளரால் இரண்டாவது தடவையாகவும் முன்வைக்கப்பட்ட போது, ஆளுங்கட்சியின் உறுப்பினரான சந்தன குணதிலக மற்றும் பிரசன்ன குமார ஆகியோர் இதற்கு எதிராக வாக்களித்தமையால் இரண்டாவது தடவையாகவும் தோல்வியைத் தழுவியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஆளுங்கட்சியின் உறுப்பினரும் பட்ஜெட்டுக்கு எதிராக வாக்களித்தவருமான சந்தன குணதிலக, "சபையின் தவிசாளர் சபை உறுப்பினர்களின் அனுமதியின்றி சில செயற்பாடுகளை முன்னெடுப்பதால், அதற்கு எதிராக வாக்களித்தேன்" என்றார்.

"சபையின் பட்ஜெட் இரண்டாவது தடவையாகவும் தோல்வியடைந்தால், சபையின் தவிசாளர் பதவி விலக வேண்டிய அவசியம் இல்லை" என தவிசாளர் பாரதிதாசன் தெரிவித்தார்.

இராகலை தீ வழக்கு

# மீண்டும் ஒத்தி வைப்பு

**ஆ.ரமேஸ்**

இராகலை தீ தொடர்பான வழக்கு விசாரணை இம்மாதம் (27) ஆம் திகதி வரை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி, இரவு இராகலை முதலாம் பிரிவு தோட்டத்தில் இந்த தீ பரவியது. இதில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உயிரிழந்தனர். உயிர் தப்பிய தங்கையா இரவீந்திரன் இராகலை பொலிசாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில், 72 நாள்களாக பதுளை சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் மேற் குறித்த சம்பவம் தொடர்பான வழக்கின் ஆறாவது தவணை விசாரணை இந்த மாதம் 20ஆம் திகதி இடம்பெறுமெனவும் இத்தினத்தில் சந்தேக நபரை வலப்பனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதிமன்ற நீதவான் டி.ஆர்.எஸ்.ஜினதாச உத்தரவிட்டிருந்தார்.

எனினும், வருட கடைசி மாதத்திற்கான நீதிமன்ற நடவடிக்கைகளுக்கான விடுமுறை எதிர்வரும் 27ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ளதால்,அன்றைய தினம் வரையிலும் மேற்படி வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக வலப்பனை நீதிமன்ற பதிவாளர், நேற்று (20) தெரிவித்தார்.





# இணையத்தளம் அங்குரார்ப்பணம்

தலவாக்கலை– கிரேட்வெஸ்டன் பாடசாலைக்கான உத்தியோகப்பூர்வமான இணையதளம் நேற்று (20) அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப ஆசிரியரின் வழிகாட்டலில் மாணவர்களால் வடிவமைக்கப்பட்ட இந்த இணையதளத்தில் பாடசாலை பற்றிய அனைத்து தகவல்களும் பதிவேற்றப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். பாரிஸ், பிரதி அதிபர் விஜயசுந்தரம்,ஆசிரியர் ஆலோசகர் என்டன் இக்னேசியஸ் ,பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துக்கொண்டனர். (பி.கேதீஸ்)

வாழ்க்கையில் வெற்றிபெற

# ஆங்கிலத்தை விருத்தி செய்ய வேண்டும்

**கே.சுந்தரலிங்கம்**

தமிழ் மொழியினை மாத்திரம் வைத்துக்கொண்டு வாழ்க்கையில் வெற்றி காண முடியாது. இணை மொழியாக உள்ள ஆங்கில மொழியினை மாணவர்கள் மத்தியில் கற்பிக்க வேண்டும் என ரொட்டரி கழகத்தின் முன்னாள் ஆளுநர் பி.டி.ஜி ஜோர்ஜ் தெரிவித்தார்.

பொகவந்தலாவை பகுதியில் வறுமை கோட்டின் கீழ், கல்விப் பயிலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கும் பிரிடோ நிறுவனத்தின் கீழ் இயங்கும் பாலர் பாடசாலைகளுக்கும் சுமார் இரண்டு மில்லியன் ரூபாய் செலவில் தொற்று நீக்க திரவம் மற்றும் முகக்கவசம் என்பவற்றைப் பெற்றுக்கொடுக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

10 ஆண்டுகள் ஆங்கில பாடத்தினை கற்றும் கூட, ஆங்கிலம் பேச முடியாத ஒரு




நிலையே காணப்படுகின்றது. இதற்கு நாம் கல்வி கற்கும் முறையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும். ஆங்கில மொழியினை இன்று பெரும்பாலானவர்களுக்கு எழுத வாசிக்க தெரிந்தாலும் பேச முடியாது. இதனை மாற்றியமைக்க வேண்டும் ஆகவே, பாலர் பாடசாலை முதல் ஆங்கில கல்வியினை பேசுவதற்கான பயிற்சியினை பெற்றுக்கொடுக்க ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றார்.

குளவிகளிடமிருந்து பாதுகாக்க

# சந்தியில் அமைதியை பேணவும்

**ஆ.ரமேஸ்**

கந்தப்பளை- ஹைபொரஸ்ட் முதலாம் பிரிவு தோட்டத்திலிருந்து கோணப்பிட்டிய மற்றும் ஹைபோரரஸ்ட் மூன்றாம் பிரிவுகளுக்குச் செல்லும் சந்தியில் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் அமைதியை கடைபிடிக்கும் படி, தோட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.



இது தொடர்பான அறிவிப்பு பலகையானது, "அமைதியாக இருக்கவும் பரம்பரை இருக்குமிடம்" என தோட்ட நிர்வாகத்தால் மரங்களில் தொங்கவிடப்பட்டுள்ளன.

இந்த சந்தியில் அடர்ந்த மரங்களில் குளவிக் கூடுகள் காணப்படுவதால், அதிக சத்தம் காரணமாக குளவிகள் கலைந்து கொட்டக் கூடும் என்ற அச்சத்தில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வைத்தியர்களின் பணிபகிஷ்கரிப்பால்

# மலையகத்திலும் நோயாளர் அவதி

**மலையக நிருபர்கள்**

அரச வைத்திய அதிகாரிகள் சங்கமானது, நேற்று (20) காலை 8 மணி முதல் நாடு தழுவிய ரீதியில் ஆரம்பித்த பணிப்பகிஷ்கரிப்பில் மலையகத்திலும் நோயாளர்கள் சிரமங்களுக்கு உள்ளாகினர்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதித்துவம் இல்லாமல், சுகாதார அமைச்சினால் 500 வைத்தியர்களுக்கான நியமனப் பட்டியல் வெளியிடப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் மலையகத்தில் உள்ள சில வைத்தியசாலைகளில் நேற்று (20) சில வைத்தியர்கள் கடமையில் ஈடுப்பட்டிருந்தாலும், சில வைத்தியர்கள் பணிபகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டிருந்தனர். இதனால் இங்கு சிகிச்சைக்காக வருகை தந்த பொதுமக்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் வீடு திரும்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதேவேளை தாதிமார்களாலும் வைத்திய கடமை மேற்கொள்ளப்பட்டது.

# கருப்பாடுகள் கூவுகின்றன

**எஸ்.கணேசன்**

" அரசாங்கத்தின் பங்காளி கட்சியாக இருந்து, கைகட்டி - மௌனம் காத்து, ஒட்டுமொத்த சமூகத்தையுமே காட்டிக்கொடுத்து - கருப்பாடுகளாக செயற்படுபவர்கள் கூட்டொப்பந்தத்துக்காக மீண்டும் கூவுகின்றனர். என, மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும், மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான ராஜாராம் தெரிவித்தார்.

தலவாக்கலையில் நேற்று முன்தினம் (19) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

> **அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர். அரசாங்கத்தின் பலம் இருக்கின்றது. அதனை பயன்படுத்தி தொழிலாளர்களுக்கு நியாயத்தை ஏன் பெற்றுக்கொடுக்க முடியவில்லை**

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

அக்கரப்பத்தனை பிளான்டேசனுக்குட்பட்ட தோட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுக்கு உரிய தீர்வை வாங்கிக் கொடுப்பதற்கு வேலைக்கு செல்லுமாறு முன்னரே அறிவுறுத்தப்பட்டுள்ளது. அப்படியானால் எதற்காக தொழிலாளர்களை போராட்டத்துக்கு இறக்க



வேண்டும்? மக்களுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்துக்கு இராஜாங்க அமைச்சர் பொறுப்புகூறவேண்டும்.

கூட்டொப்பந்தம் இல்லாததால்தான் பிரச்சினையென காரணம்காட்டி, கூட்டொப்பந்தத்துக்காக தொழிலாளர்களை தூண்டிவிடுகின்றனர். அன்று சம்பள நிர்ணய சபை ஊடாக சம்பளம் நிர்ணயிக்கப்படும் போது, கூட்டொப்பந்தம் இல்லாவிட்டால் சிக்கல் வரும் என்ற தூரநோக்கு சிந்தனை இவர்களிடம் இருக்கவில்லையா? தொழிலாளர்களை வஞ்சிக்கும் கூட்டொப்பந்தத்துக்காகவே இவர்கள் செயற்படுகின்றனர். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர். அரசாங்கத்தின் பலம் இருக்கின்றது. அதனை பயன்படுத்தி தொழிலாளர்களுக்கு நியாயத்தை ஏன் பெற்றுக்கொடுக்க முடியவில்லை என கேள்வி எழுப்பினார்.

மலையகத்தின் அடுத்த தலைமுறையினர்

# அறிவார்ந்த அரசியல் இடைவெளியை நிரப்பவேண்டும்

## கே. ராஜலிங்கம் நினைவேந்தலில் திலகர்

மலையகத்தின் பிரதிநிதித்துவ அரசியல் அறிவார்ந்த ரீதியாகவே ஆரம்பமானது. உரிமையை முன்னிறுத்திய அந்தப் பயணத்தை சலுகைகளை முன்னிறுத்திய பேரம்பேசும் அரசியலாக மாற்றி அமைத்ததன் விளைவாக மலையக அரசியல் போக்கே வேறு திசையில் சென்றதென தெரிவித்துள்ள முன்னாள் நுவரெலிய மா வட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணை ப்பாளருமான மயில்வாகனம் திலகராஜ் மலையகத்தில் ஏற்பட்டுள்ள அறிவார்ந்த அரசியல் இடைவெளியை நிரப்ப அடுத்த தலைமுறையினர் முன்வரவேண்டும் என்றார்.

"மலையக காந்தி" என போற்றப்பட்ட முன்னாள் நாவலப்பிட்டி தொகுதி



பாராளுமன்ற உறுப்பினர் கே. ராஜலிங்கம் அவர்களின் 112 ஆவது பிறந்ததின நினைவேந்தலும், அவரின் வாழ்க்கை வரலாற்று நூலான 'தீனர்களின் தொண்டன் கே . இராஜலிங்கம்' நூல் அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இரு நூறாண்டுகால மலையக பிரதிநிதித்துவ அரசியல் ஆரம்பத்தில் அறிவார்ந்த ரீதியாக செயற்பட்டது என்பதன் அடையாளங்களில் ஒன்றாக கே. ராஜலிங்கம் அவர்களை நாம் பார்க்க முடியும். இந்திய பிரதமர் நேரு இலங்கை வந்து உரையாற்றியபோது அதனை தமிழில் மொழிபெயர்த்தவர் கே. இராஜலிங்கம். 1950 களிலேயே ஜெனிவா சென்று மலையக மக்களின் பிரச்சினைகளை சர்வதேசத்திடம் முன்வைத்துள்ளார்.

எனினும், பின்னாளில் மலையக அரசியல் பேரம்பேசும் சலுகை அரசியலுக்கு தடம் மாறியதன் காரணமாக அறிவார்ந்த அரசியல் முன்னெடுப்புகளுக்கு இடம் இல்லாது போனது. மக்கள் அடிமை நிலைமைக்கு தள்ளப்பட்டார்கள்.

அண்மையில் இலங்கை வந்த ஐ.நா அறிக்கையாளர், மலையகத் தமிழர் இலங்கையில் அடிமை நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதை உறுதி செய்து அறிக்கை வழங்கியுள்ளார். இதனை மாற்றியமைக்க மலையகத்தின் அடுத்த தலைமுறையினர் அறிவார்ந்த அரசியல் தளத்தை அமைக்க முன்வருதல் வேண்டும் என்றார்.

# இழுபறிக்குள் சிக்கித் தவிக்கும் பெருந்தோட்டத்துறை மக்கள்

அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் துறைகளில் முதன்மையிலிருந்த பெருந்தோட்டத்துறை தற்போது என்ன நிலையிலிருக்கிறது என்பது யாவரும் அறிந்த விடயமாகும். தோட்டத்துறை மட்டுமன்றி, அம்மக்களும் சொலொணத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

சம்பள உயர்வுக்கான கூட்டொப்பந்தம் இம்முறை கைச்சாத்திடப்படாமல், அரசாங்கத்தின் மத்தியஸ்தத்துடன் இடம்பெற்று, நாளொன்றுக்கு 1,000 ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்கவேண்டுமென்ற வர்த்தமானி அறிவித்தலும் வெளியானது.

எனினும், சம்பள அதிகரிப்பை வழங்கமுடியாதென சில நிர்வாகங்கள் எடுத்த எடுப்பிலேயே கையை விரித்துவிட்டன. இன்னும் சில நிர்வாகங்கள் கூட்டிக் கழித்து, 1,000 ரூபாயை இறுதி செய்தன. எனினும், தோட்டத் தொழிலாளர்களுக்கு கடுமையான கெடுபிடிகள் மற்றும் நிபந்தனைகளை விதித்திருக்கும் இன்னும் சில நிர்வாகங்கள், அத்தொகையை கொடுக்காது இழுத்தடித்துக்கொண்டே வருகின்றன.

அந்நிய செலாவணி கையிருப்பு இன்மையில் அரசாங்கம் பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றது. கொரோனாவின் அலைகளின் போது, முழுநாடும் முடக்கப்பட்டிருந்தது. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வேலைக்குச் சென்றிருந்தனர். இதனூடாக ஓரளவுக்கேனும் நாட்டுக்கு அந்நிய செலாவணி கிடைத்துக்கொண்டிருந்தது என்பதை மறுதலிப்பதற்கில்லை.

இந்நிலையில், கூட்டொப்பந்தத்துக்கு ஆதரவான குரல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கிவிட்டன. இதிலென்ன கூத்தென்று பார்த்தால், அந்த ஒப்பந்தத்தில் பிரதான பங்காளர்களில் ஒருவராக இருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸே, போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது. இது “பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டிவிடும்” செயற்பாடுகளுக்கு ஒப்பானதாகும்.

இதற்கிடையே, அதிகரித்த சம்பளத்தை வழங்காத தோட்ட நிர்வாகங்கள் மீது நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அறிவித்துள்ள தொழில் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா, ஆராய்வதற்கு விசேட குழு நியமிக்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.

ஆராய்வதற்காக குழுக்கள் நியமிக்கப்படுவதும் அக்குழுக்களின் பரிந்துரைகளை ஆராய்வதற்காக மற்றுமொரு குழு நியமிக்கப்படுவதும், என்பதெல்லாம் ஒன்றும் புதிதல்ல. இறுதியில் தங்களுக்கு சாதகமில்லாத எல்லாமே கிடப்பில் போடப்பட்டுவிடும் என்பது மட்டுமே உண்மையாகும்.

சந்தர்ப்பதற்கு ஏற்றவகையில் அறிவிப்புகளை விடுத்து, மக்களின் துயரங்களில் குளிர்காயாமல், அதிகாரத்தில் இருப்பவர்களும் அவர்களின் சகபாடிகளும் அதிரடியான தீர்மானங்களை எடுத்து, உழைக்கும் மக்களை காப்பாற்றவேண்டும்.

யூரியா உரத்துக்கு தடையேற்படுத்தப்பட்டமையால், தேயிலைத் தொழில்துறையில் இன்னுமின்னும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால், விளைச்சல் குறைவடைந்துள்ளது. தரமான தேயிலைத் தூளை ஏற்றுமதி செய்யாவிடின், சர்வதேச சந்தைகளில் இலங்கைத் தேயிலைத் தூளுக்கான கேள்வி குறைந்துவிட்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை என்பதை ஞாபகத்தில் கொள்ளவேண்டும்.

அத்துடன், நவீன வளர்ச்சிக்கேற்ப ஒவ்வொரு துறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தாதுவிடின், போட்டிபோடுவது பெரும் சிரமமாகும் என்பதை ஞாபகத்தில் கொண்டு, சிக்கித்தவிக்கும் பெருந்தோட்டத்துறை மக்களின் வாழ்வில் சுபீட்சத்தை ஏற்படுத்த, ஓரணியில் திரளவேண்டுமென மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

எவருடனும் முரண்படுதல் இலகுவானது. சிலசமயம் இதன் விளைவுகள் விசாலமானது. தேவையற்ற வாக்குவாதங்களால் எவரும் தங்களை மகா புத்திசாலிகள் எனக் கருதலாகாது.

பேசும்போது காரசாரம் மிகையானால் அதைத் துண்டித்த விலகுவதே புத்திசாலித்தனம். எங்களை நாங்களே புத்திசாலி என நிரூபிக்க எண்ணுவதே கோமாளித்தனம். சிலசமயம் பிறரை வெல்லவைக்கப் பின்வாங்குவதுபோல் நடிப்பது நல்லது.

கணவன் உக்கிரமாகப் பேசினால், மனைவி விட்டுக்கொடுத்து விலக வேண்டும். அதேபோல் மனைவி சண்டைபோடும்போது, கணவன் சமயோசிதமாக அப்பால் நகருவதே புத்திசாலித்தனமானது. ஏட்டிக்குப் போட்டியான தர்க்கத்தால் பிரயோசனம் இல்லை.

எல்லோருக்கும் ரோசம், தன்மானம் இருக்கின்றது. அதில் நியாயமும் இருக்கலாம். சில தர்க்கங்களை நிரூபிக்க வேண்டும் என அடம்பிடித்தலாகாது. சமாதானம், சமரசம், மௌனம், அமைதியை உருவாக்கும் எவரையும் பகைத்தலாகாது. இதனால் எவரும் கோழைகள் கிடையாது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# புஷ்வாணமான ‘கருத்தடை’ கதைகள்

மொஹமட் பாதுஷா

புனைகதைகளையும், மிகைப்படுத்தப்பட்ட விடயங்களையும் கூறி மக்களது உணர்வுகளை தூண்டிவிட்டு, அதிலிருந்து தாம் எதிர்பார்த்த பிரதிபலன் கிடைத்த பிறகு எல்லாவற்றையும் அப்படியே ‘பூச்சியத்தால் பெருக்கிவிடுகின்ற’ அரசியலும், அதனோடிணைந்த இனவாத நகர்வுகளும் இன்னும் இலங்கையில் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

எல்லா எதிர்விளைவுளும் நடந்து முடிந்த பிறகு, ‘பொய்யானவை’ எனத் தெரிய வருகின்றன. மக்களுக்கு செய்த சேவைகளைச் சொல்லி, கொள்கைப் பிரகடனங்களை தெளிவுபடுத்தி, கருத்தியல் ரீதியான மாற்றத்தை செய்ய முடியாதவர்கள் இவ்வாறான சூட்சுமமான நகர்வுகளைச் செய்து இன, மத உணர்வுகளை உச்சாணிக் கொம்பில் ஏற்றிவிட்டு, தமக்கு வேண்டியவற்றை அடைந்து கொள்கின்ற போக்கு, இலங்கை போன்ற நாடுகளில் வாடிக்கையானதுதான்.

சிங்கள சமூகத்தின் இன விருத்தியைத் தடுப்பதற்காக முஸ்லிம்கள் கொத்து ரொட்டி போன்ற உணவுகளில் கருத்தடை மாத்திரைகளை கலந்து விற்பனை செய்கின்றார்கள். முஸ்லிம் வைத்தியர் ஒருவர் ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பப் பெண்களுக்கு கருத்தடை செய்திருக்கின்றார். முஸ்லிம் கடைகளில் விற்பனை செய்யப்படும் உள்-கீழாடைகளில் கருத்தடையை உண்டாக்கும் மருந்து தடவப்பட்டுள்ளது என பெரும் புரளிகள் கிளப்பி விடப்பட்டன.

இதற்குப் பின்னால் அரசியல் இலாப நோக்கு இருந்தது. அதுதவிர, முஸ்லிம்களின் வர்த்தகத்தையும் பொருளாதாரத்தையும் நசுக்குகின்ற வேலைத் திட்டங்களும் இருந்தன. இதனைச் செய்வதற்கான ஆயுதமாக இனவாதம் கூர் தீட்டப்பட்டது என்பதே யதார்த்தமாகும்.

இக்கதைகள் எல்லாம் வெறும் கட்டுக் கதைகள் என்பதை இப்போது சிங்கள மக்கள் தெளிவுற உணர்ந்திருக்கின்றார்கள். ஆனால், இதற்கு வினையூக்கியாக செயற்பட்ட தரப்புக்களால், இதனால் ஏற்பட்ட இன விரிசலை மட்டும் சரிப்படுத்த முடியவில்லை.

அளுத்கமை கலவரத்தை விட திகண கலவரத்தில் பள்ளிவாசல்களின் அளவுக்கு முஸ்லிம்களின் சொத்துக்கள், வர்த்தக நிலையங்களும் இலக்கு வைத்துத் தாக்கப்பட்டன. அதுபோல உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் வடமேல் மாகாணத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளிலும் வியாபார நிலையங்கள் பிரதான இலக்குகளாக இருந்தன.

ஜூலைக் கலவரத்தில் தமிழர்களின் சொத்துக்கள் குறிவைக்கப்பட்டதை இது நினைவுபடுத்தியது.

2018ஆம் ஆண்டு பெப்ரவரியில் அம்பாறை நகரில் உள்ள ஒரு முஸ்லிம் கடையில் சிங்கள வாடிக்கையாளர் ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்ட கொத்துரொட்டியில் மலட்டுத் தன்மையை அல்லது கருத்தடையை ஏற்படுத்தும் மாத்திரைகள் கலக்கப்பட்டிருந்தன என்று கூறப்பட்டு. பெரும் வன்முறையே தூண்டிவிடப்பட்டது.

அந்த உணவில் அவ்வாறு ஏதேனும் கருத்தடை பதார்த்தம் கலக்கப்பட்டிருந்ததா? என்பதை ஆய்வு செய்து உறுதிப்படுத்தாமலும், அதன்படி சட்ட நடவடிக்கை எடுக்காமலும் இரவோடிரவாக இனவாதம் தூண்டிவிடப்பட்டது.

ஆனால், இவ்வளவும் நடந்து கொண்டிருந்த போது பொலிஸாரும் சட்டமும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன. அன்றேல், எல்லாம் நடந்து முடிந்த பிறகு களத்திற்கு வந்தன. இதற்குப் பின்னால் சிங்கள அரசியல்வாதி ஓரிருவர் இருக்கின்றனர் என்று தகவல்கள் வெளியாகின.

ஆனால், நல்லாட்சி அரசாங்கம் இது விடயத்தில் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. சிறுபான்மைச் சமூகங்கள் தலையில் வைத்துக் கொண்டாடிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஒலுவிலில் கூட்டத்தை நடாத்தி விட்டு, ஸ்தலத்திற்குச் சென்று பள்ளியை பார்வையிடாது, கொழும்புக்குப் பறந்தார்.

முன்னதாக, சில சிங்கள ஊடகங்களில் கருத்தடைக் கதைகள் உலாவரத் தொடங்கியிருந்தன. முஸ்லிம் கடைகளில் உணவுகளை வாங்குவதை தவிர்க்குமாறு பொதுபலசேனா, சிங்கஹலே போன்ற கடும்போக்கு அமைப்புக்களும் சிங்கள மக்களிடையே பிரசாரத்தை மேற்கொண்டிருந்தன.

‘அம்பாறை ஹோட்டலில் அது கையும் களவுமாக பிடிபட்டது’ என்ற விம்பத்தை ஏற்படுத்த இனவாத தரப்பினர் முயன்றனர். அதனூடாக் உணவு மற்றும் உள்ளாடை ஊடாக முஸ்லிம்கள் சிங்கள மக்களின் இன விருத்தியை குறைக்க முற்படுகின்றார்கள் என்று கற்பித்ததை நம்ப வைப்பதே அவர்களது நோக்காக இருந்தது.

சரி அப்படியென்றாலும், ஹோட்டலில் பிரச்சினை என்றால், பள்ளிவாசல் ஏன் தாக்கப்பட்டது என்ற கேள்விக்கெல்லாம் இன்றுவரை விடை கிடைக்கவில்லை.

இது விடயத்தில் கணிசமான முஸ்லிம், தமிழ் வைத்தியர்கள் மௌனம் காத்தனர். அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இதன் சாத்தியப்பாடு பற்றிய எவ்வித கருத்துக்களையும் முன்வைக்கவில்லை.

அதனையும் தாண்டி, பல சிங்கள வைத்திய நிபுணர்கள் இவ்வாறு உணவில் கலக்கக் கூடிய அல்லது உள்ளாடையில் பூசக் கூடிய கருத்தடை மருந்துகள் இல்லை என்பதை பகிரங்கமாகவே சொன்னார்கள்.

இந்த நிலையில்தான் 2019 ஏப்ரல் தாக்குதல் இடம்பெற்றது. இந்த தாக்குதலுக்குப் பின்னால் பெரிய திட்டமும் சூழ்ச்சியும் இருந்தது என்பதை பின்னர் சிங்கள மக்கள் உணர்ந்திருக்கின்றார்கள். ஆனால் ஒரு பயங்கரவாத கும்பலின் செயற்பாட்டுக்காக, அப்போது ஒட்டுமொத்தமாக முஸ்லிம் சமூகம் மீதே சுட்டுவிரல் நீட்டப்பட்டது.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இனவாதிகள் மீண்டும் ஒரு புரளியைக் கிளப்பிவிட்டார்கள். அதாவது, ‘குருணாகல் வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர் ஷாபி, தன்னிடம் சிகிச்சைக்காக வந்த பல நூற்றுக்கணக்கான பெண்களுக்கு கருத்தடை செய்திருக்கின்றார்’ என்ற மிக அபத்தமான ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

கருத்தடை செய்வது என்பது அவ்வளவு சிறிய விடயமல்ல. அது நீண்டநேரம் எடுக்கின்ற ஒரு செயன்முறை. அப்படியிருக்க ஆயிரத்திற்கு மேற்பட்ட பெண்களுக்கும் அவர்களது கணவன் மற்றும் சுகாதார ஊழியர்களுக்கும் தெரியாமல் கருத்தடை செய்வது என்பது கற்பனைக்குக் கூட எட்டாத ஒரு விடயமாகும்.

அப்படியான ஒரு அறிகுறி தெரிந்திருந்தால், எப்போதோ இந்த விவகாரம் வெடித்திருக்கும். சம்பந்தப்பட்டோர் வைத்தியரின் சட்டையைப் பிடித்திருப்பர் அல்லது சட்டத்தின் முன் நிறுத்தியிருப்பர்.

ஆனால், இக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட பிறகு இவ்விடயத்தை புத்திசாலித்தனமாக சிந்திக்காமல் இனவாத அடிப்படையில் சிந்தித்ததால் சிங்கள மக்களும் ஏன் சில தமிழர்களும் கூட இதனை நம்பினார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இந்தப் பின்னணியில் ஷாபி சிறைப்பிடிக்கப்பட்டார்.

இந்த தருணத்தில், ஒரு வைத்தியரால் இத்தனை பேருக்கு கருத்தடை செய்ய முடியாது. மருத்துவ ரீதியாக அது சாத்தியமே இல்லை என்பதை சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் முன்வரவில்லை. அதிலிருந்த முஸ்லிம் வைத்தியர்களும் பெரும் வரலாற்று தவறை இழைத்தனர்.

ஒரு வைத்தியருக்கு சிறியதோர்அவமானம் நடந்தாலும் பணிப்பகிஷ்கரிப்பில் குதிக்கின்ற இச் சங்கம், இது விடயத்தில் வேறு ஒரு நிலைப்பாட்டை எடுத்தது. அதன் நடவடிக்கைகளில் அரசியல் சாயம் வெளுக்கத் தொடங்கிய காலமாக இதனைக் குறிப்பிடலாம்.

அதேபோல், நல்லாட்சி அரசாங்கமோ அதன் பின்னர் வந்த இவ்வரசாங்கமோ இந்த உண்மையை மக்களுக்கு கூறாமல் விட்டதன் மூலம் பெரும் தவறிழைத்தன. சிங்கள மக்களின் உணர்வுகளோடு ஒத்திசைந்து பயணித்து, வாக்குகளைச் சுருட்டிக் கொள்ளவே அவர்கள் கணக்குப் போட்டனர்.

குறிப்பிட்ட வைத்தியர் பதவி இடைநிறுத்தப்பட்டு, கைதாகி, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்த சமகாலத்தில் நூற்றுக்கணக்கான பெண்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டதாக பாதுகாப்புத் தரப்பினர் நீதிமன்றுக்கு அறிவித்தனர்.

ஆனால் எந்தக் குற்றச்சாட்டுக்களையும் விஞ்ஞான ரீதியாகவோ சட்ட அடிப்படையிலோ இரு வருடங்களாக நிரூபிக்க முடியவில்லை. அதுமட்டுமன்றி, கருத்தடை செய்யப்பட்டதாக முறையிட்டிருந்தவர்கள் பிறகு கர்ப்பம் தரித்தமை, இவர்களை வெட்கித் தலைகுனிய வைத்தது.

இந்நிலையில், இப்போது வைத்தியர் ஷாபியை மீண்டும் சேவைக்கு அழைப்பதற்கும் இடைப்பட்ட காலத்துக்கான சம்பளத்தை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எது எவ்வாறிருப்பினும், முஸ்லிம்கள் கருத்தடை மாத்திரைகளை போட்டு உணவுப் பொருட்களை வழங்குகின்றனர் என்றும், உள்ளாடைகளில் மலட்டுத்தன்மையை ஏற்படுத்தும் பதார்த்தங்களை தடவுகின்றனர் என்றும், டாக்டர் ஷாபி ஏகப்பட்டோருக்கு கருத்தடை செய்தார் என்றும் கூறப்பட்ட பொய்யான கட்டுக் கதைகளும் ஊடகப் பிரசாரங்களும் தலைகுப்புற விழுந்து மண்கவ்வியுள்ளன.

## கடிதங்கள்

### 300 மீற்றரை மட்டுமாவது பாருங்கள்



நுவரெலியா மாவட்டத்தில் கோணக்கலையில் இருந்து கல்கந்த பாலம் வரையிலான சுமார் 300 மீற்றர் தூரமான வீதி, தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் கடுமையாக பழுதடைந்து காணப்படுகின்றது.

இந்த வீதியை, கோணப்பிட்டிய, மந்தாரம்நுவர, குட்வூட்ட மற்றும் எலமுள்ள போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களும் கோணப்பிட்டிய பிரதேச வைத்தியசாலை, பாடசாலை தேயிலைத் தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களில் இருந்து வாகனங்களில் பயணிக்கக்கூடிய ஒரேயொரு வழியாகும்.

இந்த வீதியில் பயணிக்கும் பாரவூர்திகள், அவதானத்துடன் செலுத்தப்படல் வேண்டும் எனவும் அறிவித்தல் இடப்பட்டுள்ளது.

வீதியை சீரமைக்காவிடின், எதிர்காலத்தில் முற்றாக போக்குவரத்துச் செய்யமுடியாத நிலைமையொன்று ஏற்பட்டுவிடுமென அப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

ஆகையால், காலந்தாழ்த்தாது குறிப்பிட்ட பகுதியை உடனடியாக புனரமைத்துத் தருமாறும் கோரியுள்ளனர்

ஆ.ரமேஸ்

# அனுஷ்கா சர்மா நெகிழ்ச்சி



விராட் கோலி, நடிகை அனுஷ்கா சர்மாவிற்கு கடந்த ஜனவரி மாதம் பெண் குழந்தை பிறந்தது. இதை தொடர்ந்து இருவரும் தங்களது மகளின் முகத்தை சமூக வலைதளங்களில் வெளியிடாமலேயே ரகசியம் காத்து வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த வாரம் விராட் கோலி தென் ஆப்ரிக்கா சுற்றுப்பயணத்திற்காக மும்பை விமான நிலையம் சென்றிருந்தபோது தனது மகள் வாமிகா, மனைவி அனுஷ்கா சர்மா இருவரையும் அழைத்து சென்றார்.

அப்போது பத்திரிகையாளர் ஒருவர், கோலியின் மகளின் முகத்தை புகைப்படம் பிடித்துவிட்டார். ஆனாலும் அந்த புகைப்படம் எந்த பத்திரிக்கையிலும் வெளியாகவில்லை. இந்நிலையில் அந்த பத்திரிக்கையாளருக்கு அனுஷ்கா சர்மா இன்ஸ்டாகிராமில் நன்றி தெரிவித்துள்ளார்.

"என் மகளின் புகைப்படம், வீடியோ எதையும் வெளியிடாத அந்த பத்திரிக்கையாளருக்கும், ஊடகங்களுக்கும் நன்றி. எங்கள் மகளை விளம்பர வெளிச்சம் இல்லாமல் வளர்க்க நினைக்கிறோம். அவர் வளர்ந்த பிறகு தன் விருப்பத்தை அவரே தேர்ந்தெடுக்கட்டும். அதுவரை எங்களுக்கு ஆதரவு கொடுங்கள்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.



# ஓடிடியில் மாநாடு

சிம்பு நடிப்பில் தற்போது வெளியாகி இருக்கும் 'மாநாடு'திரைப்படத்தை வெங்கட் பிரபு இயக்க, சுரேஷ் காமாட்சி தயாரித்து இருக்கிறார். சிம்புவுடன் கல்யாணி பிரியதர்ஷன், எஸ்.ஜே.சூர்யா உள்ளிட்ட பலர் நடித்திருந்தார்கள்.

பல தடைக்களை கடந்து நவம்பர் 25 ஆம் திகதி திரையரங்கில் இந்தத் திரைப்படம் வெளியானது. அனைவரும் சிம்பு மற்றும் எஸ்.ஜே.சூர்யாவின் நடிப்பை பாராட்டி வருகிறார்கள்.

அண்மையில், நடிகர் சிம்பு, தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சியுடன் மாநாடு திரைப்படத்தின் வெற்றியை கேக் வெட்டி கொண்டாடினார்.

இந்நிலையில் மாநாடு திரைப்படம் வரும் டிசெம்பர் 24 ஆம் திகதி சோனி லைவ் ஓடிடி தளத்தில் வெளியாக இருப்பதாக படக்குழுவினர் அறிவித்துள்ளனர்.



# 'பொன்னியின் செல்வன்' இசை வெளியீட்டு விழா?

இயக்குநர் மணிரத்னம் இயக்கத்தில் உருவாகி வரும் 'பொன்னியின் செல்வன்' திரைப்படத்தின் முதல் பாகத்தின் படப்பிடிப்பு முடிவடைந்த நிலையில் ஏப்ரல் மாதம் வெளியாகும் என்று கூறப்பட்டு வருகிறது

இந்த நிலையில் தற்போது இந்தத் திரைப்படத்தின் புரமோஷன் பணிகளை தொடங்க படக்குழுவினர் முடிவு செய்திருப்பதாகவும் முதல்கட்டமாக இந்த படத்தின் இசை வெளியீட்டு விழாவை இதுவரை இல்லாத அளவில் மிகவும் பிரமாண்டமாக நடத்த படக்குழுவினர் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது

அந்த வகையில் 'பொன்னியின் செல்வன்' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா வெளிநாட்டில் நடைபெற உள்ளதாகவும் குறிப்பாக லண்டன் மற்றும் டுபாய் ஆகிய இரு இடங்களில் ஒன்றில் இசை வெளியீட்டு விழா நடைபெறும் என்றும் கூறப்படுகின்றது.

முக்கிய சிறப்பு விருந்தினர்கள் இந்த இசை வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வார்கள் என்றும், விரைவில் இசை வெளியீட்டு விழா திகதி மற்றும் இடம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

இந்தத் திரைப்படத்துக்கு இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்து வருகிறார்.

# சென்னை: தமிழக மீனவர்களை பாதுகாக்கவில்லை

குஜராத் மீனவர் ஒருவரை, பாகிஸ்தான் கடற்படை தாக்கியது என்றவுடன், புதுடெல்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரை, அயல் உறவுத்துறை அமைச்சகத்துக்கு வரவழைத்து, கண்டனத்தைப் பதிவு செய்கின்ற பாரதிய ஜனதா கட்சி அரசு, தமிழக மீனவர்களைத் தாக்குகின்ற இலங்கைத் தூதரை அழைத்து எச்சரிக்கை செய்யாதது ஏன்? என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ கேள்வியெழுப்பியுள்ளார்.

தமிழ்நாட்டு மீனவர்கள் 55 பேரை, இலங்கைக்கடற்படை கைது செய்து இருக்கின்றது; அவர்களுடைய 6 மீன்பிடிப் படகுகளைப் பறிமுதல் செய்து கொண்டு போயிருக்கின்றனர்.



1980-களில் தொடங்கி, 40 ஆண்டுகளுக்கும் மேலாக, ஆயிரத்திற்கும் மேற்பட்ட தாக்குதல்களில், 600-க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை, இலங்கைக்கடற்படை சுட்டுக்கொன்று விட்டது என்றும் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரளத்தில் இரண்டு மீனவர்களைச் சுட்டுக் கொன்ற இத்தாலியர்களைச் சிறைப்பிடித்து, அந்த நாட்டிடம் இருந்து கோடிக்கணக்கில் இழப்பீட்டுத் தொகை பெற்றுக் கொடுத்து இருக்கின்றார்கள். அதுபோல, இலங்கைக் கடற்படையால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழக மீனவர்களுக்கு இழப்பீடு எதுவும் பெற்றுத் தந்தது இல்லை. அந்தக் கோரிக்கையைப் பலமுறை வலியுறுத்தியும் பயன் இல்லை என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆலந்தூர், நடைபயிலும் பெண்களிடம் சில்மிஷம் செய்த என்ஜினீயர்

சென்னையை அடுத்த ஆலந்தூரிலிருந்து வேளச்சேரி வரை உள்ள உள்வட்ட சாலையில் அதிகாலையில் பொதுமக்கள் நடைபயிற்சி சென்று வருகின்றனர்.

புழுதிவாக்கம் பகுதியில் தனியாக நடைபயிற்சி செல்லும் பெண்களிடம் அத்துமீறி வாலிபர் ஒருவர் சில்மிஷம் செய்து விட்டு மோட்டார் சைக்கிளில் வேகமாக சென்று விடுவதாக மடிப்பாக்கம் பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளது.

மாறுவேடத்தில் சென்றிருந்த பொலிஸார், ஒரு பெண்ணிடம் சில்மிஷம் செய்துவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்றதை அவதானித்தனர். அந்த மோட்டார் சைக்கிள் இலக்கத்தை வைத்து மடிப்பாக்கம் கைவேலி தந்தை பெரியார் நகரைச் சேர்ந்த கணினி பொறியிலாளரை (என்ஜினீயர்) பொலிஸார் கைது செய்தனர்.

இவ்விளைஞனுக்கு எதிராக இதேமாதிரியான முறைப்பாடுகள் பல இருக்கின்றன என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டது.



# சென்னை: மீனவர்களின் பிரச்சினைக்கு உடனடி தீர்வு வேண்டும்

மீனவர்கள் பிரச்சனையில் கடிதம் எழுதுவது போதாது, அப்பிரச்சினைக்கு உடனடி தீர்வு காண வேண்டுமென அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் (அ.தி.மு.க). ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம் தமிழக அரசுக்கு வலியுறுத்தியுள்ளார்.



தமிழ்நாட்டு மீனவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பது மற்றும் மீன்பிடி உரிமையை காப்பது ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் மாநில அரசுக்கு இருக்கிறது என்றும் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மீன்பிடித் தொழிலையே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள தமிழ்நாட்டு மீனவர்களை சர்வதேச கடல் எல்லையை தாண்டினார்கள் என்ற காரணத்தைச் சொல்லி அடிக்கடி அவர்களை கைது செய்து சிறையில் அடைக்கும் நிகழ்வுகள் தமிழ்நாட்டு மீனவர்களிடையே ஒருவித அச்ச உணர்வையும், அனுமதியின்மையையும், மனஉளைச்சலையும் ஏற்படுத்துகிறது என்பதால் கடிதம் எழுதி பிரயோசனம் இல்லை. உடனடியாக தீர்க்கவேண்டும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# மும்பை: விலைபோன எருமை

மராட்டிய மாநிலம் ஷாங்கிலி மாவட்டத்தில் எருமை மாடொன்று ஒன்று ரூ. 80 இலட்சத்துக்கு ஏலத்தில் விற்பனையாகியுள்ளது . கஜேந்திரா என்ற அந்த எருமை சுமார் ஒன்றரை டன் எடையுள்ளது. அந்த எருமையிடம் செல்பி எடுக்க மக்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

எடையை பராமரிக்க இந்த மாடு ஒரு நாளுக்கு 15 லீற்றர் பால் குடிப்பதாகவும் ,நான்கு வேலையும் கரும்பு, புற்கள்




உட்கொள்வதாகவும் மாட்டின் உரிமையாளர் கூறியுள்ளார் .இனப்பெருக்கத்துக்கு இந்த வகை மாடுகள் பெரிதும் உதவும் என்பதால் பல இலட்சம் கொடுத்து வாங்க விவசாயிகள் போட்டி போட்டுள்ளனர்.

# காபூல்: ஆப்கான் வளர்ச்சிக்கு இந்தியா உதவும்

ஆப்கானிஸ்தான் வளர்ச்சிக்கு இந்தியா உதவுமென இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் உறுதி அளித்துள்ளார்.

புதுடெல்லியில் நேற்று முன்தினம் (19) நடைபெற்ற வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டத்தில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கலந்து கொண்டார்.

கஜகஸ்தான், தஜிகிஸ்தான், டர்க்மெனிஸ்டன், உஸ்பெகிஸ்தான், கியார்கஸ் குடியரசு உள்ளிட்ட பல நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கலந்து கொண்ட இந்த கூட்டத்தில் பேசிய



இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், "ஆப்கானிஸ்தானில் ஒருங்கிணைந்த கூட்டாட்சி மலரவும், ஆப்கன் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் பொருளாதார ரீதியாக இந்தியா உதவவும்" என்று உறுதியளித்தார்.

# நயன்தாராவின் அதிரடி



லேடி சூப்பர் ஸ்டார் நயன்தாராவின் அடுத்தத் திரைப்படமும் ஓடிடியில் வெளியாக அதிக வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது

நயன்தாரா நடிப்பில் உருவாகி வரும் திரைப்படம்"02". இந்தத் திரைப்படத்தை ஜிகே வெங்கடேஷ் என்பவர் இயக்கி வருகிறார்.

படப்பிடிப்பு கிட்டத்தட்ட முடிவடைந்துள்ள நிலையில் இந்தத் திரைப்படத்தை ஓடிடியில் விற்பனை செய்ய பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது.

இந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டால் விரைவில் ஓடிடியில் 02 திரைப்படம் வெளியாகும் திகதி அறிவிக்கப்படும் என்று கூறப்படுகிறது

ஏற்கெனவே ஓடிடியில் நயன்தாரா நடித்த 'மூக்குத்தி அம்மன்' மற்றும் 'நெற்றிக்கண்' ஆகியத் திரைப்படங்கள் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றிருந்தன.

இதேவேளை, நயன்தாராவின் 'காத்துவாக்குல ரெண்டு காதல்' திரைப்படம் திரையரங்கில் தான் வெளியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் மாற்றம்?



சிவகார்த்திகேயன் நடித்து முடித்துள்ள 'டான்' திரைப்படத்தின் போஸ்ட் புரடொக்சன்ஸ் பணிகளும் புரமோஷன் பணிகளும் தற்போது விறுவிறு ப்பாக நடைபெற்று வருகிறன.

'டான்' திரைப்படம் வரும் பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி காதலர் தினத்தில் வெளியாகும் என தகவல் வெளிவந்த நிலையில் தற்போது மாற்றம் இருப்பதாக கூறப்படுகிறது.

பெப்ரவரி 17 வியாழக்கிழமை இந்தத் திரைப்படம் வெளியாக அதிக வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. மேலும் பெப்ரவரி 17 சிவகார்த்திகேயன் பிறந்தநாள் என்பதால் ரசிகர்களுக்கு அவரது பிறந்த நாள் விருந்தாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

சிவகார்த்திகேயன் ஜோடியாக பிரியங்கா அருள்மோகன் நடித்துள்ள இந்தத் திரைப்படத்தில் ஷிவாங்கி, சமுத்திரக்கனி, எஸ் ஜே சூர்யா, பாலசரவணன், சூரி உள்பட பலர் நடித்துள்ளனர்.

# புதுச்சேரி: சட்ட சபைக்குள் புக முயன்ற சாரை

புதுவை சட்டசபை வளாகத்தில் வழக்கம் போல் காவலர்கள் பணியில் இருந்தனர். அப்போது பாம்பொன்று ஊர்ந்து செல்வதை சட்டசபை காவலர்கள் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்.

இது குறித்து சட்டமன்ற மார்ஷல் ரமேஷ் மூலம் வனத்துறைக்கு தகவல்



தெரிவிக்கப்பட்டது. வனதுறை ஊழியர்கள் சக்திவேல், கோபி ஆகியோர் சட்டசபை வளாகம் வந்து பாம்பை தேடினர்.

உணவருந்தும் மேசை பகுதியில் மறைந்திருந்த பாம்பை கண்டுபிடித்தனர். பின்னர் அதனை லாவகமாக பிடித்தனர். பிடிப்பட்ட பாம்பு சுமார் 4 அடி நீளமுள்ள சாரை பாம்பாகும். இதனை ஒரு பையில் போட்டு வனத்துறைக்கு எடுத்து சென்றனர்.

# ராணிப்பேட்டை, யூ-டியூப் பார்த்து பிரசவம்; குழந்தை உயிரிழப்பு

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அடுத்த பனப்பாக்கம், நெடும்புலி கிராமத்தைச் சேர்ந்தவர் லோகநாதன். அதே பகுதியில் மரச்செக்கு எண்ணெய் உற்பத்தி தொழில் செய்து வரும் இவருக்கு, ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு



திருமணம் நடந்தது.

இந்நிலையில் கர்ப்பமுற்ற அவரது மனைவிக்கு கடந்த 13ஆம் திகதி பிரசவம் நாள் கொடுக்கப்பட்டிருந்தது. எனினும், 18ஆம் திகதி மாலை அவரது மனைவிக்கு பிரசவ வலி ஏற்பட்டுள்ளது. இந்த சூழலில் லோகநாதன் யூ-டியூபை பார்த்து அதன்படி பிரசவம் பார்த்தபோது இறந்த நிலையில் ஆண் குழந்தை பிறந்துள்ளது. மனைவி தொடர்ந்தும் சிகிச்சைப் பெற்று வருகின்றார்

அமீரகம்

திரைப்படங்களில்

# இனி தணிக்கை இல்லை

சர்வதேச அளவில் திரையிடப்படும் வயது வந்தோருக்கான திரைப்படங்களில் இனி காட்சிகள் நீக்கம் செய்யப்படமாட்டாது என்றும், பெரியவர்களுக்கான குறைந்தப்பட்ச வயது 21 ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்றும் அமீரக அரசு ஊடக ஒழுங்குமுறை அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அலுவலகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "அனைத்து நாடுகளில் உள்ளது போல் அமீரகத்திலும் திரைப்படங்களை பார்க்கும் பார்வையாளர்களின் வயது வரம்பு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இதில் பெரியவர்கள் மட்டும் பார்க்கும் திரைப்படங்களை காண சிறுவர்கள் அனுமதிக்கப்படுவது



இல்லை. இதற்கு ஏற்கெனவே வயது அடிப்படையில் பெரியவர்கள் பார்க்கும் தணிக்கை செய்யப்படாத திரைப்படங்களை காண குறைந்தபட்ச வயது வரம்பு 18 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதில் தற்போது மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு வயதுவந்தோருக்கான திரைப்படங்களை காண குறைந்தப்பட்சம் 21 வயது இருக்க வேண்டும் என்ற விதிமுறை கொண்டு வரப்படுகிறது.

அதுமட்டுமல்லாமல் சர்வதேச அளவில் வெளியிடப்படும் திரைப்பட காட்சிகளில் இனி மாற்றங்கள் செய்யப்படாது அல்லது தணிக்கையில் காட்சிகள் நீக்கப்படாது.

பொதுவாக சர்வதேச திரைப்பட வெளியீடுகளில் அமீரகத்தில் அனுமதி அளிக்கப்பட்டாலும் வயது வந்தோருக்கான கருப்பொருள் கொண்ட திரைப்படங்களில் காட்சிகள் வெட்டப்படுவது வழக்கமாக உள்ளது. இந்த நடைமுறை தற்போது மாற்றப்படுகிறது. எனவே திரைப்படங்கள் அதன் அசல் சர்வதேச பதிப்பில் திருத்தப்படாமல் திரையிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# இங்கிலாந்தை மீண்டும் வென்ற அவுஸ்திரேலியா

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா வென்றுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், அடிலெய்ட்டில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்த இப்பகலிரவுப் போட்டியின் நேற்றைய ஐந்தாம் நாளை, தமது இரண்டாவது இனிங்ஸில் 4 விக்கெட்டுகளை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இங்கிலாந்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 192 ஓட்டங்களைப் பெற்று 275 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், ஜொஸ் பட்லர் 26, கிறிஸ் வோக்ஸ் 44 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ஜையை றிச்சர்ட்ஸன் 5, மிற்செல் ஸ்டார்க், நேதன் லையன் ஆகியோர் தலா 2, மிஷெல் நேஸர் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக மர்னுஸ் லபுஷைன் தெரிவானார்.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா: 473/9 (துடுப்பாட்டம்: மர்னுஸ் லபுஷைன் 103, டேவிட் வோணர் 95, ஸ்டீவ் ஸ்மித் 93, அலெக்ஸ் காரி 51, மிற்செல் ஸ்டார்க் ஆ.இ 39, மிஷெல் நேஸர் 35 ஓட்டங்கள். பந்துவீச்சு: பென் ஸ்டோக்ஸ் 3/113, ஜேம்ஸ் அண்டர்சன் 2/58, ஒலி றொபின்ஸன் 1/45, ஜோ றூட் 1/72, ஸ்டுவர்ட் ப்றோட் 1/73, கிறிஸ் வோக்ஸ் 1/103)

இங்கிலாந்து: 236/10 (துடுப்பாட்டம்: டேவிட் மலான் 80, ஜோ றூட் 62, பென் ஸ்டோக்ஸ் 34, கிறிஸ் வோக்ஸ் 24 ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் ஸ்டார்க் 4/37, நேதன் லையன் 3/58, கமரொன் கிறீன் 2/24, மிஷெல் நேஸர் 1/33)



அவுஸ்திரேலியா: 230/9 (துடுப்பாட்டம்: ட்ரெவிஸ் ஹெட் 51, மர்னுஸ் லபுஷைன் 51, கமரொன் கிறீன் ஆ.இ 33, மார்க்கஸ் ஹரிஸ் 23 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜோ றூட் 2/27, டேவிட் மலான் 2/33, ஒலி றொபின்ஸன் 2/54, ஸ்டுவர்ட் ப்றோட் 1/27, ஜேம்ஸ் அன்டர்சன் 1/8)

இங்கிலாந்து: 192/10 (துடுப்பாட்டம்: கிறிஸ் வோக்ஸ் 44, றோறி பேர்ண்ஸ் 34, ஜொஸ் பட்லர் 26, ஜோ றூட் 24, டேவிட் மலான் 20 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜையை றிச்சர்ட்ஸன் 5/42, மிற்செல் ஸ்டார்க் 2/43, நேதன் லையன் 2/55, மிஷெல் நேஸர் 1/28)

போட்டியின் நாயகன்: மர்னுஸ் லபுஷைன்

அமெரிக்கா

அதிக பட்சமாக

# வரியை செலுத்துபோகும் கோடீஷ்வரர்



டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி எலான் மஸ்க். உலக கோடீஸ்வரர்களில் ஒருவர். இவரை, அமெரிக்காவின் பிரபல டைம்ஸ் மாத இதழ், இந்த ஆண்டுக்கான சிறந்த நபராக சமீபத்தில் தெரிவு செய்திருந்தது.

எனினும், இவருக்கு ஆதரவாக ஒரு பிரிவினரும், இவருக்கு எதிராக ஒரு பிரிவினரும் எப்போதும் சமூக வலைத்தளத்தில் தங்கள் கருத்துக்களை பதிவிடுவது வழக்கம்.இந்நிலையில் இவர் சரியாக வருமான வரி கட்டுவதில்லை என சமூக வலைத்தளத்தில் இவருக்கு எதிராக சிலர் பதவிட்டு வந்துள்ளனர்.

தனக்கு எதிரான விமர்சனங்கள் அனைத்துக்கும் பதிலடி தரும் வகையில் தற்போது எலான் மஸ்க் டுவிட் செய்துள்ளார். அதில் அவர் தான் இந்த வருடம் 221 கோடி ரூபாய் (இலங்கை ரூபாய் மதிப்பில்) வரி செலுத்த உள்ளதாக தெரிவித்துள்ளார். இந்த வரி தொகையை அவர் செலுத்தும் பட்சத்தில் அமெரிக்காவில் ஒரு தனிநபர் செலுத்திய அதிகபட்ச வரியாக இது இருக்கும்.

பிரித்தானியா




ஒரேநாளில் 12 ஆயிரத்தை

# தாண்டியது ஓமிக்ரோன்

பிரித்தானியாவில் மாத்திரம் 82 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் நேற்று (20) மட்டும் 12,133 பேருக்கு ஓமிக்ரோன் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவில் ஓமிக்ரோன் தொற்று இனங்காணப்பட்டதன் பின்னர் 12 ஆயிரத்துக்கும் அதிகமானோர் ஒரேநாளில் பாதிக்கப்படுவது இதுவே முதல்முறையாகும். பிரித்தானியாவில் ஒட்டுமொத்தமாக ஓமிக்ரோன் வைரஸ் பாதிப்பு 37,101 ஆக அதிகரித்துள்ளது. கொரோனா பாதிப்பு ஒரு கோடியே 13 லட்சத்து 61 ஆயிரத்து 387 ஆகஅதிகரித்துள்ளது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சமநிலையில் லிவர்பூல் டொட்டென்ஹாம் போட்டி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணிக்கும், லிவர்பூலுக்குமிடையிலான போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

லிவர்பூல் சார்பாக, டியகோ ஜோட்டா, அன்ட்றூ றொபேர்ட்ஸன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். டொட்டென்ஹாம் சார்பாக, ஹரி கேன், சண் ஹெயுங்-மின் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, வொல்வர்ஹம்ப்டன் வொண்டரேர்ஸின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், செல்சிக்குமிடையிலான போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

கௌதமாலா சிட்டி

# மோதலில் 12 பேர் மரணம்

மத்திய அமெரிக்காவில் கௌதமாலா நாடு உள்ளது. அந்நாட்டின் நாலுலம் மற்றும் சண்டா ஹடரினா ஐஸ்டஹூஹன் பகுதிகளில் வசித்து வரும் இரு தரப்பினர் இடையே கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக நிலப்பிரச்சினை இருந்து வருகிறது.

இந்நிலையில், இந்த நிலப்பிரச்சினை தொடர்பாக நேற்று முன்தினம் (19) நாலுலம்



பகுதியிலுள்ள சின்கியூக்ஸ் கிராமத்தில் இரு தரப்பினர் இடையே மோதல் ஏற்பட்டது.

இந்த மோதலில் இருதரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இந்த துப்பாக்கிச்சூடு மோதலில் பெண்கள் உள்பட 12 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார் படுகாயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

எல்.பி.எல்: கிங்ஸை வீழ்த்தி

# இறுதிப் போட்டியில் கிளாடியேட்டர்ஸ்



லங்கா பிறீமியர் லீக்கின் (எல்.பி.எல்) இறுதிப் போட்டிக்கு கோல் கிளாடியேட்டர்ஸ் தகுதி பெற்றுள்ளது.

ஹம்பாந்தோட்டையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஜஃப்னா கிங்ஸுடனான முதலாவது தகுதிப் போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே இறுதிப் போட்டிக்கு கிளாடியேட்டர்ஸ் தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற கிங்ஸின் அணித்தலைவர் திஸர பெரேரா, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய கிளாடியேட்டர்ஸ், குசல் மெண்டிஸின் 85 (53), தனுஷ்க குணதிலகவின் 55 (42), அணித்தலைவர் பானுக ராஜபக்‌ஷவின் 25 (15), அன்வர் அலியின் 12 (07) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, 189 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் சார்பாக ரஹ்மனுல்லா குர்பாஸ் 59 (37), வனிடு ஹஸரங்க 29 (15) மாத்திரமே இரட்டை இலக்க ஓட்டங்களைத் தாண்டிய நிலையில், ஏனையோர் நுவான் துஷார, அன்வர் அலி, இசுரு உதான, புலின தரங்க, மொஹமட் ஆமிரிடம் வரிசையாக விக்கெட்டுகளை வீழ்த்திய நிலையில், 16.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 124 ஓட்டங்களையே பெற்று 64 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக மெண்டிஸ் தெரிவானார்.

இந்நிலையில், இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாவது தகுதிகாண் போட்டியில் கிங்ஸும் தம்புள்ள ஜையன்ட்ஸும் மோதவுள்ளன.

இலங்கை ஆசிரியர் வருடாந்த தடகள சம்பியன்ஷிப்:

# இரண்டாமிடம் பெற்ற அஸ்வர்

எம்.என்.எம். அப்ராஸ்

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற இலங்கை ஆசிரியர் வருடாந்த தடகள சம்பியன்ஷிப் 2021 விளையாட்டுப் போட்டியில் கல்முனை, அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலய ஆசிரியர் எம்.ஏ. அஸ்வர், 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டா மிடத்தைப் பெற்றார்.




பின்லாந்து

# காரை வெடிக்க வைத்த நபர்

தெற்கு பின்லாந்தின் - கிம்மென்லாக்சோ என்ற இடத்தில் டூமாஸ் காட்டைனேன் என்பவர் தனக்கு சொந்தமான டெஸ்லா காரை கடந்த சில தினங்களுக்கு முன் பழுது பார்ப்பதற்காக ஒரு நிறுவனத்தில் ஒப்படைத்துள்ளார்.

அவர் காரை ஒப்படைத்த சில தினங்களில் அந்த நிறுவனத்தில் இருந்து அவருக்கு அழைப்பு வந்துள்ளது. அங்கு சென்று பார்த்த போது அவரது காரை பழுது பார்க்க 45 இலட்சம் (இலங்கை ரூபாய்மதிப்பில் ) வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த அடைந்த அவர் தனது காரை 45 இலட்சம் கொடுத்து சரி செய்வதற்குப் பதிலாக 30 கிலோ டைனமைட்டைப் பயன்படுத்தி வெடிக்க வைத்துள்ளார். அந்த



காருக்கு வெடிமருந்துகளை வைப்பதும் அதன் பிறகு அந்த கார் வெடித்து சிதறுவதும் படமாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இந்த வீடியோவை வைரலாகி வருகிறது.

இது தொடர்பில் கூறியுள்ள காரின் உரிமையாளர், ''நான் டெஸ்லாவை வாங்கியபோது, முதல் 1,500 கிலோமீற்றர் அது நன்றாக ஓடியது. பின்னர் அது சரியாக இயங்கவில்லை. எனவே எனது காரை பழுதுபார்க்கும் நிறுவனத்தில் ஒப்படைத்தேன். ஏறக்குறைய ஒரு மாதமாக கார் அங்கேயே இருந்தது, கடைசியாக எனது காருக்கு அவர்களால் எதுவும் செய்ய முடியாது என்று எனக்கு அழைப்பு வந்தது என்றார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாக்கிழமை, 21 டிசெம்பர் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.